இயேசுவை ஏற்றுக்கொள்ளும்
முன் அல்லது
இயேசுவை ஏற்றுக்கொண்ட
பின் வாசிக்கவும்


# திருச்சபையா?



# தெருச்சபையா?

மகிமையின்
செங்கோல்
MAGIMAYIN SENGOL

S. சந்திரசேகரன்




## உதவி செய்கிறோம் உங்களுக்கு

- குளோரி வேதாகம கல்லூரியின் மூலம் தபாலில் வேதத்தை முறைப்படி கற்றுக்கொள்ள உதவி செய்கிறோம்.
- அழைக்கும் ஆலயங்களுக்கு சென்று சாப விடுதலைக் கூட்டங்கள்; நற்செய்தி கூட்டங்கள், வேதபாட வகுப்புகள், மூன்று நாள் முகாம்கள் நடத்தி தருகிறோம்.
- உங்கள் ஜெப விண்ணபங்களுக்கு ஜெபிக்கவும், தேவ ஆலோசனை களுக்கும் முழு நேர ஊழியர்களும், ஜெபவீரர்களும் ஜெபத்தோடு காத்திருக் கிறார்கள். கடிதம் மூலம், மின் அஞ்சல் (email) மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.



### உங்கள் கவனத்திற்கு

- பதினோராம் மணி ஊழியங்கள் ஒரு கிறிஸ்தவ அறமத நிறுவனமாகும்.
- அரசாங்கத்தில் 1994 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஸ்தபானத்தின் கீழ் மகிமையின் தேவாலயம் என்கிற சபை ஊழியங்கள், குளோரி வேதாகம கல்லூரி, குளோரி திருமண தகவல் நிலையம் போன்ற ஏழு வித மான ஊழியங்களை இயக்கி வருகிறது.
- இயன்றவரை இரட்சகர் இயேசு வை இந்தியாவிற்கு அறிவித்து ஒவ் வொரு மனிதரையும் தேவனின் பிள்ளைகளாய் விசு வாசிகளாய், சீஷர்களாய், ஊழியராய் உருவாக்கி உன்னத வருகைக்கு ஆயத்தப்படுத்த தன்னை அர்ப்பணித்துள்ளது. "பதி னோ ராம் மணி ஊழியம்"
- இவ்வூழியத்தில் நீங்களும் இணையலாம், பிறரையும் இணைக்கலாம்
- நாம் ஒருமித்து கர்த்தரின் நாமத் தை மகிமைப்படுத்துவோம் அல்லேலூயா!

நேர் வழியாய் நம்மை நடத்தும்
தேவனுக்கு ஸ்தோத்திரம்!

இப்புத்தகத்தில் குறைகள் இருந்தால்
என்னை திருத்துங்கள் மேன்மை
என்று என்னைச் சொல்லுங்கள்
நிறைகள் இருந்தால் அது தேவனின்
கிருபையாகும்
அவருக்கே மகிமை என்று
ஜெபம் செய்யுங்கள்
எந்த நிலையிலும் யாரையும்
குற்றப்படுத்துவதும், குறை சொல்லுவதும்
எனது நோக்கமல்ல
சகலத்தையும் நிதானித்து
நல்லதை பிடித்துக்கொள்ளவும்.
சுகமாய் இருப்பீர்களாக!

### இதழின் உள்ளே

- பதினோராம் மணி ஊழியங்கள் விளம்பரம்
- ஆசிரியரிடமிருந்து
- சபை கூடி வருதலை விட்டு விடாதிருப்போம்
- விசுவாசிகளுக்கு வரும் இடறல்கள்
- சாட்சி கொடுக்கும் போது செய்ய வேண்டியது
- வீடுகளில் ஜெபக்கூட்டம் நடத்த விரும்புகிறவர்களுக்கு
- அடிப்படை அஸ்திபாரக் கருத்துக்கள்
- சபைக்கு ஏன் வந்தேன்?

**Eleventh Hour Ministries**
**S. Chandrasekaran**

# ஆசிரியரிடமிருந்து...



திரியேக தேவனின் நாமத்தில் தேவ ஆசீர்வாதம் கூறுகிறேன்! சுகமாய் இருப்பீர்களாக!

அவரில் அன்புகூறுகிற உங்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி வாழ்த்துகிறேன்.

நீங்கள் இனி வரும் காலங்களில் வார்த்தையிலும்; நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிருக்கும்படி கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

கடந்த நாட்களில் ஊழியத்தின் பாதை உற்சாகமாய் இருந்தது சபை ஊழியங்களில்; திருமண ஊழியங்களில்; வேதாகமக் கல்லூரியில்; இலக்கிய ஊழியங்களில் கர்த்தரின் கரம் கிரியை செய்வதை உணர முடிகிறது.

**ஆத்தும ஆதாயம் ஒன்றே உறுதியான நோக்கமாக கொண்டு உழைக்கிறோம்.** அதற்காக வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத ஜனங்களுக்கு; விக்கிரகங்களுக்கும்; ஜீவன் தந்த ஆண்டவர் இயேசுவுக்கே வித்தியாசம் அறியாத மக்களுக்கு சுத்தமான சுவிஷேசத்தை அறிவிக்கிறோம்.

மனம் திரும்புதலோடு வருகிறவர்களை சபைகளிலே சேர்க்கிறோம். இயேசுவோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்தவும், அதிலே வளரவும் வழிகாட்டுகிறோம். களங்கமில்லாத ஞானப்பாலாகிய திருவசனத்தில் வளர்க்கிறோம்.

விசுவாசிகள்–சீஷர்களாய், தேவனுக்கு அடிமைகளாய், ஊழியர்களாய், மாசற்ற மணவாட்டிகளாய் உருவாக்குகிறோம். சென்ற இருபத்தி நான்கு ஆண்டுகளாய் என் ஊழியத்தில் அநேக விசுவாசிகளை பார்த்திருக்கிறேன். பழகி இருக்கிறேன். மேய்ப்பராக இருந்து உருவாக்கி இருக்கிறேன். மட்டுமல்ல நானும் என் தனிப்பட்ட வாழ்வில் ஏழு ஆண்டுகள் விசுவாசியாய் வாழ்ந்து பார்த்திருக்கிறேன்.

எனவே விசுவாசிகள் வாழ்வில் வரும் இடறல்கள், இன்னல்கள், இன்ப துன்ப நிகழ்வுகள் அனைத்தையும் தொகுத்து அனுபவ ரீதியாக இப்புகத்தகத்தில் எழுதி இருக்கிறேன். இன்றைய திருச்சபைகள் நான்கு சுவற்றுக்குள் விசுவாசிகளை அடைத்து வைக்கும் அமைப்பாக இயங்காமல்...,

அவைகள் தெருவிலே, வீதிகளிலே, சமுதாய அமைப்பிலே விசுவாசிகளை சாட்சி சொல்பவர்களாக; இடறல் அற்றவர்களாக, ஊழியம் செய்பவர்களாக உருவாக்க வேண்டும். அதற்காகத் தான் இப்புத்தகத்தின் தலைப்பை **"திருச்சபையா? தெரு சபையா?"** என வைத்தேன்



விசுவாசிகள் சபைக்குள் இருக்கும் அதே வல்லமையுடன் வெளியிலேயும் வந்து வாழ்ந்து காட்டினால்..., தொலைந்து போன ஆடுகள் மந்தைக்குள் தானே வந்து சேரும். மேய்ப்பன் குட்டி போட இயலாது. ஆடுகள்தான் குட்டி போட வேண்டும் என்றும் அநேக போதகர்கள் சொல்லக் கேட்டு இருக்கின்றேன்.

அதற்கு மேய்ப்பன் ஆடுகளுக்கு ஆகாரமாகிய பசும்புல்லை அதிகமாக தரவேண்டும். அப்போதுதான் அவை பால் கறக்கும். சத்தியத்தை அதிகமாக ஊட்டி வளர்த்தால்; அவர்களாகவே காணிக்கை தருவார்கள். ஆத்தும ஆதாயமும் செய்வார்கள்.

திரும்ப திரும்ப நான் சொல்லுகிற ஒரு செய்தி; யாரையும் குற்றப்படுத்துவதோ, குறைசொல்லுவதோ எனது பழக்கம் அல்ல. அது என் நோக்கமும் அல்ல.

இதில் வரும் வார்த்தைகள் என் இருதயத்தின் அழுகுரல். என்னிடம் குறைவுகள் இருந்தால் என்னை கிறிஸ்துவுக்குள் குழந்தையாக எண்ணிக் கொள்ளுங்கள். நிறைவு இருந்தால் அது தேவனின் கிருபை என்று முடிவு செய்யுங்கள்.

நமது கிறிஸ்தவ உலகமே நாளுக்கு நாள் சாரம் இழந்து சாட்சி கெட்டு போகிறது என புலம்புகிறவர்களை பார்க்கிறோம். திருடர்களாக பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. ஆகவே எல்லோரையும் திருடர்கள் என்று கூறுவதை நிறுத்திவிட்டு,

எந்த திருத்தமும் – நல்ல கிரியையும் என்னில் தொடங்கட்டும். மற்றவரிடம் நான் எதிர்பார்க்கிற நல்ல குணங்கள் என்னிடம் ஆரம்பிக்கட்டும் என நினைத்து முதலில் நாமே திருத்திக் கொள்வோம்.

ஒரு மரத்திலிருந்து கோடிக்கணக்கான தீக்குச்சிகளை உருவாக்கலாம். ஒரே ஒரு தீக்குச்சியிலிருந்து கோடிக்கணக்கான மரங்களை உருக்குலைக்கலாம் அழிக்கலாம். உங்களுக்குள் இருக்கும் சக்தி உருவாக்கும் சக்தியா? அழிக்கும் சக்தியா? ஒரு நிமிடம் சிந்தியுங்கள்.


இந்தியா மட்டுமல்ல; ஏன் முழு உலகமே அந்நிக்கிருஸ்துவின் ஆட்சிக்கு ஆயுத்தமாகிக் கொண்டு இருக்கிறது. நமக்கும் பரிசுத்தர்களாய் பறந்து போய் மத்திய ஆகாயத்தில் மணவாளனோடு மகிழும் காலங்கள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

***மாரநாதா! இயேசு சீக்கிரம் வருகிறார்***

கிறிஸ்துவுக்குள்
அறியாத அன்புடனே அன்புகூறும்
**மேய்ப்பர் S. சந்திரசேகரன்.**

அத்தியாயம் 1

# சபை கூடி வருதலை விட்டு விடாதிருப்போம்



இந்த முதலாம் அத்தியாயத்தை ஆறு தலைப்புகளின் கீழ் விளக்க விரும்புகிறேன். திருச்சபை என்றால் என்ன? திருச்சபை கவனிக்க வேண்டியவைகள் என்ன? ஏன் சபை கூடிவரு வதலை விட்டு விடுகிறார்கள்? சபை எடுத்துக் கொள்ளப்படுதல் போன்ற தலைப்புகளின் கீழ் தேவ செய்தியை எழுதுகிறேன்.

**முதலாவது திருச்சபை பற்றிய சிறு விளக்கம்:**

- பூர்வ காலத்தில் சபையை தேவன் சம்பாதித்தார்; புதிய ஏற்பாட்டு காலத்தில் இயேசுவும் தன் சுய இரத்தத்தை சிந்தி; கிரயம் கொடுத்து சபையை ஏற்படுத்தினார்.
- இக்கடைசி காலங்களில் சபையை மேய்ப்பதற்காக பரிசுத்த ஆவியானவரையும் கண்காணிகளாக ஊழியக் காரர்களையும் உருவாக்கி இருக்கிறார்.
- சபை என்பதை மூல பாஷையில் யில் "எக்ளிசியா" என்று சொல்கிறார்கள். அதன் பொருள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வேறு பிரிக்கப்பட்ட கூட்டம் என்பதாகும் ஆகவே சபை என்றதும் ஏதோ ஒரு கட்டிடத்தை மட்டும் என நம் நினைவில் நினைக்க கூடாது.
- வெறும் வழிபாட்டு ஸ்தலம் மட்டும் அல்ல அது; ஜனங்களுக்கு தேவனுடைய வழிகளை, பரலோக பாதைகளில் வழி நடத்துதலை பெறும் இடமாகவும் இருக்க வேண்டும்.
- சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து இயேசு தலையாக இருக்கிறார். ஆகவே தலையாகிய இயேசு கிறிஸ்துவுக்கு சபை எல்லா காரியங்களிலும் கீழ்படிய வேண்டும்.
- சபை அங்கத்தினர் விசுவாசிகள் அனைவரும் அந்த சரீரத்தின் அவயங்களாக இருக்கிறார்கள்.
- அநேகராகிய நாம் ஒரே அப்பம் ஒரே சரீரத்தின் உறுப்புகள் என்ற அடிப்படை சத்தியம் ஒவ்வொரு விசுவாசி யின் இருதயத்தின் ஆழத்தில் பதிய வேண்டும்.
- இயேசு சபையை போஷிக்கிறார், காப்பாற்றுகிறார், மட்டுமல்ல; ஆவியானவரும் சபையில் காது உள்ளவர்களுக்கு; அதாவது கேட்கிற மனம் உள்ளவர்களுக்கு சத்தியங்களை அறிவிக்கிறார். சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார், உணர்த்துகிறார், தேற்றுகிறார். நம் கண்களுக்கு தெரியாத அந்த **சர்வ சங்க சபையில்** நம்மையும் ஒரு அங்கமாகும் படி வைக்கிறார்.

**ஆகவே சபை என்ன செய்ய வேண்டும்?**

- இரட்சிக்கப்பட்டவர்களை அனுதினமும் சபையில் சேர்க்க வேண்டும். ஆனால் சபையில் சேருகிறவர்கள் மேற்குறிப்பிட்ட அடிப்படை சத்தியங்களை உணர்ந்து கொள்வதில்லை
- சபையில் சேர்ந்தால்..., எனக்கு ஏதாவது உலக வேலை கிடைக்குமா? திருமணத்திற்கு பெண், மாப்பிள்ளை கிடைக்குமா? பணம் கிடைக்க ஏதாவது வழி இருக்குமா? சமுதாயத்தில் அந்தஸ்து கிடைக்குமா? கல்யாணம் செய்யவும், கல்லறை கிடைக்கவும், குழந்தைகள் பெயர்வைத்து பிரதிஷ்டை செய்து பள்ளி கூடத்தில் படிக்க இடமும் கிடைக்குமா? என்ற இரண்டாம் தர எண்ணங்களோடும் ஏக்கங்களோடும் சேருவதால் சபையின் நோக்கமே பாழ்படுத்தப் படுகிறது.
- அவர்களது அத்தனை தேவைகளையும் நிச்சயம் சபை சந்திக்கும் அதற்கு சந்தேகமே இல்லை. ஆனால் அதையே முதலாவது குறிக்கோளாக கொண்டு சபைக்கு செல்வதால் பல சிக்கல்கள் ஏற்படுகிறது.
- சபை உங்களுக்கு என்ன செய்யும் என்ற கேள்வியை விட, சபைக்கு நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என்ற பதிலே பல ஆசீர்வாதங்களுக்கு அஸ்திபாரமாக இருக்கும். ஒரு நன்மையை பெறுவதற்காக அல்ல; தேவையில் உள்ள ஒரு சிலருக்கு நன்மையை நான் தருவேன் என்ற நோக்கம் உயர்ந்த தாகும்.
- விசுவாசிகளின் இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களை கர்த்தரே ஏற் படுத்துவார். அந்த மேய்ப்பர்கள் சபைகளில் வயதில் முதிர்ந்த, ஆவியில் வளர்ந்த பரிசுத் தத்திற்கு

சாட்சியாய் இருக்கின்ற சபைக்கு துரோகம் செய்யாத வர்களை தேர்ந்தெடுத்து மூப் பர்களாக ஏற்படுத்த வேண்டும்.

- அதோடு சபையை நடத்தி செல்ல, ஊழியங்களை வழி நடத்த; ஆரம்ப காலகட்டத் திலேயே இரண்டாம் நிலைத் தலைவர்களையும் ஏற் படுத்த வேண்டும்.

- விஷேசமாய் சபையில் மூன்று பேரோ, ஏழு பேரோ கொண்ட குழு காணிக்கையாளர்களாக இருப்பது சிறப்பாக இருக் கும். தசமபாகம், தர்மபணம், காணிக்கை, வரவு, செலவு, போன்றவற்றை அந்தக் குழு கண்காணித்து வருடம் ஒரு முறை சபையின் ஆண்டு விழாவின் போதோ அல்லது வருட கடைசி ஆராதனை போதோ சபைக்கு தெரியப் படுத்த வேண்டும்.

- பெந்தகொஸ்தே, ஆவிக்குரிய சபைகள் பண ரீதியாக வள ராததற்கு காரணம் வெளிப் படையாக கணக்குகளை ஜனங்களிடம் காட்டாததும் ஆகும். பண விஷயத்தில், நிர் வாக விஷயத்தில் சர்வாதிகார போக்கு சங்கடங்களை உண் டாக்கும். எனவே ஜனநாயக வழியே, பண நாயகத்திற்கு சரியாக அமையும்.

- சபைக்குள்ளும், சபைக்கு வெளியேயும் ஏதோ வெளி நாட்டுப் பணம், வெள்ளை பணம், கருப்பு பணம், என்று மற்றவர்களை தவறாக புரிந்து கொள்ள காரணமாக வழிவகுக் கின்றது. ஆகவே காணிக்கை கொடுப்பவர்களுக்கு அது எவ்விதம் செலவு செய்யப்படு கிறது என்ற கணக்கும் தெரிந் திருந்தால் வீணான சிந்தை வராது.

- சபைக்குள் வருகிற ஆரம்ப கால விசுவாசிகளுக்கு, தொ டக்கத்திலேயே ஒரு பொறுப்பு தந்து, அவர்களுக்கு ஏதேனும் ஒரு வேலை செய்ய பழக்கு விக்கப்பட வேண்டும். கிறிஸ்து வினுடைய உபவத்திரவங் களில் குறைவானதை அவரு டைய சரீரமாகிய சபைக்காக மாமிசத்தில் நிறைவேற்ற வேண்டும். அதாவது பாடு களில் பங்கு எடுக்கவும் பங்கு போட்டுக் கொள்ளவும் அவர் களை தயார் படுத்த வேண்டும்.

- சுகபோகமான வாழ்வும் கிரயம் கொடுக்காத ஆசீர் வாதமும், ஆவிக்குரிய வாழ் வில் வளராமலேயே சகல நன்மைகளையும் பெறலாம், என்ற குறுக்கு வழிகளும், தீய நோக்கங்களும், களைகளாக வளராதபடி விசுவாசிகளை வளர்க்க வேண்டும்.



- கிளை நறுக்கி, கொடிகளை சுத்தம் செய்தால் தான் அதிக கனிகளை கொடுக்க முடியும்.

## திருச்சபைக்கு வரும்போது...,

- மனமகிழ்ச்சியின் நாளாகிய ஞாயிற்றுகிழமையை பண்டி கை நாளைப்போல நினைத்து கொண்டாட வேண்டும். நாம் ஓய்வு நாளை அல்ல; உயிர்த் தெழுந்த நாளை நினைவுகூறு கிறோம். ஆகவே சனிக்கிழமை யே ஆயத்த நாள். ஞாயிற்றுக் கிழமை ஆராதனைக்கு செல்ல வேண்டிய நாள்.

- சனிக்கிழமை இரவே, ஆலயத் திற்கு போகும்போது அணிய வேண்டிய ஆடைகளை ஆயத்த மாக எடுத்து வைக்க வேண் டும். முந்தின நாளுக் குரிய வேலைகளை நேரத் தோடு முடிக்கவும், ஒரு மணி நேரமா வது வாரத்தின் கடைசி நாளில் தேவ சமூகத்தில் தன்னை தாழ்த்தி, மனதை பரிசுத்தப் படுத்தி அடுத்த நாள் தொழு கைக்கு தயார் செய்து கொண் டால்...., ஆராதனை இன்ப மாக இருக்கும்.

- ஆகவே **Holiday is a Holy Day...,** அதாவது ஓய்வு நாள் என்பது நமக்கு பரிசுத்தநாள். எனவே ஆராதனைக்குரிய பரிசுத்த நாளில் சொந்த



பேச்சு பேசாமலும், இஷ்டமான இடங்களுக்குச் செல்லாமலும் பணம் அதிகமாக வேண்டும் என (Over time work) அதிகப்படியான வே லைக்கு போகமலும், அந்த நாளில் உறவினர்களை பார்க்க செல்லுதல், கல்யாணத்திற்கு சென்றேன். காதுகுத்த சென் றேன், என சாக்கு போக்கு சொல்வதை நிறுத்த வேண்டும்.

- அப்போது தான் தேவன் தம் பிள்ளைகளை உயர்ந்த இடங் களில் ஏறிவரச் செய்து யாக் கோபின் சுதந்திரத்தால் போஷிப்பார்.

- முடிந்தவரை சபையின் ஆரா தனை கூட்டங்களுக்கு உப வாசத்துடன் வருவது சாலச் சிறப்புடையது. சபையில் வந்து இரண்டு மணிநேரம் ஆராதித்தபிறகு மூன்று மணி நேரம் அங்குள்ள மற்றமனிதர் களிடம் வீணாக பேசிக் கொ ண்டு இருப்பது ஆவிக் குரிய ஐக்கி யத்திற்கு ஆபத்து.

- தேவனோடு தொடர்பு கொள்ளும் நேரத்தைவிட மனிதர்களோடு தொடர்பு கொள்ளும் நேரம் கூடும் போது அந்த உறவுகளில் நிச்சயம் பிரிவுகள் வருகிறது. அநேகர்



இதை அனுபவத்தில் உணர்ந்து உள்ளார்கள்.

- வேதாகமம் எடுத்து செல்ல வேண்டும். தற்கால விசுவாசிகள் பைபிள் எடுத்து வருவதே இல்லை. மாறாக புதிய ஏற்பாடு மட்டும் எடுத்து வரும் ஆட்களையும் பார்க்கிறேன் இது தவறு.

- உங்கள் கையில் எழுதுகிற பேனா, (ஏனெனில் செய்தி குறிப்பு எடுக்கும் போது சிலருடைய பேனா எழுதாமல் போவதால் மற்றவரிடம் கேட்டு வாங்கும் பழக்கம் உள்ளது) குறிப்பு எழுத நோட்டு (சிலர் துண்டு பேப்பரில் எழுதி காற்றில் விடுவார்கள்) ஆகவே உங்கள் பையில் பைபிள், நோட்டு, பேனா, எல்லாம் சரியாக இருக்கிறதா? என பார்த்து எடுத்து வர வேண்டும்.

- கூடுமான வரை கால தாமதம் செய்யாமல் குறித்த சமயத்திற்கு முன்னே ஆலயத்தில் ஆராதனைக்கு வந்து காத்திருக்கும் பழக்கம் நல்லது. அது போல சபையின் ஆராதனை முடிந்து தேவ ஆசீர்வாதம் சொன்ன பிறகு வீட்டிற்குச் செல்வது சரியான ஒழுங்கு முறை ஆகும். காணிக்கை முடிந்த பிறகு; சபைக்குள் நுழைவது தேவ செய்தி நேரத்தில் தூங்குவது கடைசி ஜெபம் செய்யும் நேரத்தில் எழுந்து அவசர அவசரமாக ஓடுவது எத்தனை மன வேதனை தெரியுமா? நம் மேய்ப்பர்களுக்கு.

- சிலர் தேவ செய்திக்கு மட்டும் வந்தால் போதும் என்ற மன நிலையும் உடையவர்களாய் இருக்கின்றனர். இது பாதி கிணறு தாண்டுவதைப் போல ஆபத்தானது.

- பிரசங்க நேரத்தில் கொட்டாவி சிலருக்கு வந்து கொண்டே இருக்கும். கொட்டாவி அல்ல; அது; கெட்ட ஆவி என்று சொல்லுவேன் நான்.

- ஒரு ஆள் தூங்க; அவரை ஒன்பது பேர் வேடிக்கை பார்க்க..., மற்றவர்களுக்கும் அந்த நித்திரை மயக்கம் தானாகவே வரத்தொடங்கும் அபாயம் உள்ளது.

- ஐத்திகு என்ற இளைஞன் பவுல் பிரசிங்கித்த நேரத்தில் தூங்கியதால் கீழே விழுந்து மரித்தான். ஆம்..., நான் அடிக்கடி சொல்வது ஆலயத்தில் தூங்குபவன் ஜீவன் இழப்பான் என்று ஆகவே கன நித்திரையின் ஆவிக்கு எதிர்த்து நில்லுங்கள்.



**சபைக்குள் வந்தவுடன் :**

- முன்வரிசையில் வரிசை வரிசையாக உட்கார வேண்டும். ஆலயத்தில் முன்னுக்கு இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னுக்கு வரமுடியும்.

- பிரசங்க நேரத்தில் குறுக்கு நெடுக்க நடப்பது கூடாத பழக்கம். சிறு பிள்ளைகளை வைத்து சிலர் கொஞ்சிக் கொண்டும், அதனோடு விளையாடிக் கொண்டும் இருப்பதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். பலர் பிள்ளைகளை அடக்குவதே இல்லை. அவர்கள் செய்யும் குறும்புகளில் ஊழியர்களுக்கு அழுகையே வந்து விடும். அவரால் கண்டிக்கவும் முடியாது. கண்டிக்காமல் இருக்கவும் முடியாது.

- மன உளைச்சலை ஏற்படுத்தும் சம்பவம் இது. ஒரு குழந்தையினால் எத்தனையோ போராட்டங்களுடன் உட்கார்ந்துள்ள மற்ற விசுவாசிகளுக்கும் இடறல்கள் உண்டாகிறது. எனவே இதை வாசித்த பின்னராவது மனம் திரும்புங்கள். ஆலயத்தின் பிரசன்னம் உங்கள் குழந்தையினால் பாதிக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

- பிரசங்க நேரத்தில் தண்ணீர் குடிப்பது, சாக்லெட் சாப்பிடுவது, பப்ள்காம் மெல்லுவது; கால்மேல் கால் போட்டுக் கொண்டு மேலே ஓடும் மின்விசிறிகளை (fans) கணக்கெடுக்கும் பழக்கங்களை தவிர்க்கலாம் தேவனுடைய பிள்ளைகள் தெய்வ பயம் இல்லாமல் இருப்பது நல்லதல்ல.

- ஆலயத்திற்கு வரும் முன்னரே உங்கள் வாகனங்களை மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நிறுத்தி பூட்டி விட்டு வர வேண்டும். உங்களது உடைமைகள் பாதரட்சைகள், குடைகள், சாவி, மணி பர்ஸ், கைப்பை, போன்ற எந்த ஒரு பொருட்களும் தொலையாமல் பார்த்து கொள்ளுங்கள். பிறகு மற்றவர்களை குற்றப்படுத்தாதீர்கள்.

- செருப்பு தொலைவது தான் சபை முடிந்த பின்னர் எழும் பெரிய தலைவலி. இதை எல்லாம் முன்னமே யோசித்து சரி செய்திருந்தால் தான் சபை விசுவாசிகளுக்குள் எத்தனையோ சண்டைகள் வந்திருக்காது.

- சபைக்குள் செல்போன் மணி அடிப்பது மன்னிக்க முடியாத குற்றம்.



அதை மனதிலே கொண்டு.... உள்ளே உழையும் முன்னே...., செல்போனை அதிர்வு நிலைக்கு அல்லது (Switch off) செய்து விட வேண்டும். தேவ னோடு, தேவ ஊழியரோடு, திருச்சபையோடு உறவு கொள்ளும்போது உங்கள் செல்போன் இடையூறு உண்டாக்காதபடி கவனமாய் இருங்கள்.

- வீட்டுக் கூட்டங்கள், பிறந்த நாள், விசேஷித்த நிகழ்ச்சிகள் ஜெப விண்ணப்பங்கள், திருமண நாள், தொலைபேசி எண், முகவரி மாற்றங்கள் எதுவானாலும் முன்னமே சபையின் தகவல் நிலையத்தில் (Information Centre) அல்லது மேய்ப்பரோடு முன்னமே கலந்து பேசி தகவல்களை பரிமாறிக் கொள்ளுங்கள். ஒரு துண்டு பேப்பரில் எழுதி கொடுத்து விடுங்கள். அப்போது உங்கள் பாஸ்டர் மறக்கவே மாட்டார்.

## விசுவாசி மற்ற ஒரு விசுவாசியுடன் பழகும் போது:

- கண்ணியமான ஆவிக்குரிய உறவு முறை இருக்க வேண்டும். தலை கால் புரியாமல் எல்லை மீறி, வரம்பு மீறி பழகுவது பின்னர் ஒரு வரை ஒருவர் குறை சொல்வது கூடாத பழக்கம்.

- எனவே சபைக்குள் தவணை முறையில் பொருட்கள் வாங்குவது விற்பது, ஏலச்சீட்டு பிடிப்பது, சிபாரிசுகளுக்கு முயற்சிப்பது என்கிற வேலைகளுக்கு இடமே இல்லை. இருவர் கூட்டு சேர்ந்து (Business Partner Ship) செய்யும் தொழில் கூடவே கூடாது. கடைசியில் இரு வரும் முட்டி மோதிக் கொண்டு இருப்பக்கமும் சபைக்கு வராமல் நிற்பார்கள்.

- அந்த பையனுக்கு: இந்த பெண் என்று மனதில் கணக்கு போட்டு காய் நகர்த்தும் தந்திரங்கள் அருவருப்பானது. அக்கா, தங்கை, அண்ணன், தம்பி உறவுகள் எந்நிலையிலும் மாறவே கூடாது. இதற்கு மேல் இந்த குறிப்பை நான் விளக்க விரும்ப வில்லை.

- ஏனெனில் சிலுவையில் தாயே உன் மகன்; மகனே உன் தாய் என்ற உறவை ஏற்படுத்தியவர் நம் இயேசு. இங்கே மகன் மாதிரி; அம்மா மாதிரி; அக்கா மாதிரி; அண்ணன் மாதிரி தான் பழகுகிறோம் என்று தொடங்கும் போது தான் உறவுகள் கேலிக்கும் கிண்டலுக்கும் காரணமாய்





அமைகிறது. கடைசியில் எல்லாம் ஒரு மாதிரி யாகிவிடுகிறது. ஏன் இப்படி எழுதுகிறேன் என்று உங்களுக்கே புரியும்.

4 எனவே எல்லைக் கோடுகள் வகுத்துக்கொண்டு பழகத் தொடங்குங்கள். அது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பானது.

- கணவன் மனைவி பிரச்சனைகளிலும் எந்த குடும்ப பிரச்சனை களிலும் சபை மேய்ப்பரோ, மூப்பரோ ஈடுபடுவதிலும் ஒரு வரை முறை இருக்க வேண்டும் அதிகமாக மூக்கை நுழைத்தால் இறுதியில் மூக்கு அறுப்படும். பிறகு அழுது லாபம் இல்லை.

## சபை கூடிவருதலை நிறுத்த வேண்டாம்:

- சபையாரோடு, மேய்ப்பரோடு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சபைக் கூடி வருதலில் தடை இருக்க கூடாது. யாருடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்பத்திலும் குறுக்கிட்டு குழப்பம் செய்யாமல் உங்கள் ஐக்கியம் தேவனோடு சரியாய் இருக்கிறதா? என அடிக்கடி சோதித்து அறிந்து கொள்ளுங்கள். நல்லது செய்வதாக நினைத்து யாருக்கும் கெடுதல் செய்யாதீர்கள்.



- தேவ சித்தம், தேவ திட்டம், வழி நடத்துதல் அறிந்து கொள்ள உங்கள் ஆத்துமாவுக்கு உத்திரவாதம் கொடுக்கிற மேய்ப்பரிடம் தனிப்பட்ட முறை யில் நேரம் ஒதுக்கி வந்து பேசி; ஜெபித்து தெரிந்து கொள்ளுங்கள்.

- அதை விட்டுவிட்டு பெரிய ஊழியக்காரர்களுக்கு கடிதம் போட்டு விட்டு காத்திருக்கிறார் கள். பதில் வரும். பதிலை எழுதுவது யார்? அந்த ஊழியரா? இல்லை. அவரது அலுவலகத்தில் இருக்கிறவர்கள் கடிதத்தைப் படித்துவிட்டு இவர்களுக்கு ஏற்ற விதத்தில் பதில் எழுதுவார்கள்.

- கடைசியில் நினைப்பது ஒன்று. நடப்பது ஒன்று பிறகு. அவர் சரியில்லை. இவர் சரியில்லை என்பார்கள். முதலாவது நீங்கள் சரியாக இருந்தால் இத்தனை பிரச்சனைகளும் ஏற்படவே வாய்ப்பில்லை.

- உங்களை நேசித்து, கண்டித்து எச்சரித்து, புத்தி சொல்லி, திருத்தும் ஆவிக்குரிய தகப்பனாகிய உங்கள் சபை மேய்ப்



பருக்கு உண்மையாய் இருங் கள். எல்லாவி தமான தேவ திட்ட மும் நிச்சயம் நிறை வேறும்.

- முதலில் உங்கள் முழங்காலை நம்புங்கள். தனி ஜெபத்தில் போராடி வல்லமையை பெற்றுக் கொள்ளுங்கள். மூளை அறிவி னால் முடியாதது. முழங்கால் ஜெபத்தால் முடிந் தே தீரும்.
- ஒவ்வொரு ஆராதனைக்கும் செல்லும் முன் உயிர் உள்ள காணிக்கையாக ஆத்துமாக் களை ஆலயத்திற்கு அழைத்து வருவது தேவனுக்கு பிரிய மான பலியாக இருக்கும்.
- ஆவிக்குரிய ஆகாரத்திரட்சி உண்டாகவும், பரலோகத் தின் பலகனிகள் திறந்து இடம் கொள்ளாத மட்டும் ஆசீர்வா தம் தேவையானால்.., தசம பாகத்தை பண்டக சாலைக்கு கொண்டு வாருங்கள்.
- நம்து ஆட்கள் வசந்த பவனில் சாப்பிட்டு விட்டு அதற்குரிய பணத் தை ஆனந்தபவ னில் தந்து விட்டு போனால் அது எப்படி நியாயமாக இருக்கும்? அது போல திருவிருந்து புசிப் பதும், ஆவிக்குரிய மன்னா வை உட்கொள்ளுவதும் ஒரு இடம் ஆனால் காணிக்கை கொடுப்பது வேறு ஒரு இடம்.
- பெருமைக்கு என்று காணிக் கை கொடுப்பவர்களுக்கு பிர மாணத்தை உடைத்துவிட்டு பேர், புகழுக்கு ஆசை படுகிற வர்களுக்கும் பரலோகம் செல் லும் திறவுகோலை யார் வைத் திருக்கிறார்கள் என்ற சத்தியம் விளங்குவதே இல்லை. தங்க சாவியினாலே பரலோக வாசலை திறக்கமுடியாது
- வருடத்திற்கு ஒருமுறையா வது சபை யாருக்கு தெரிவித்து மேய்ப் பரை அழைத்து விட்டுக் கூட்டம் நடத்துங்கள். அது சபை. யார் உங்களோடு ஐக்கியப் பட ஏதுவாய் இருக்கும்.

**சபை கூடிவருதலை ஏன் சிலர் விட்டு விடுகிறார்கள்.**

- தேவனோடு சரியான ஐக்கி யம் இல்லாதது ஒரு முக்கி யமான காரணமாக அமை கிறது. பாவிகள் தேவ சபை யில் நிலைத்து இருப் பது இல்லை. மாய்மாலக்காரனோ அவர் சந்நிதியில் சேரமுடி யாது. என வேத வார்த்தைகள் திட்டமாய் போதிக்கிறது. மட்டு மல்ல..., பரம பிதா நடாத நாற் றுக்கள் வேரோடு பிடுங்கி எறியப்படும்.
- இந்த கடைசி காலங்களில் மூன்றில் ஒரு பங்கு நட்சத்தி ரங்கள் சத்துரு வெட்டி வீழ்த்து கிறான். அதாவது வேஷம் போடும் விசுவாசிகள் சபை



யின் உறவிலிருந்து வெட்டப் படுகிறார்கள். சரியான மனம் திரும்புதலும், இரட்சிப்பின் அனுபவமும், ஆவியின் அபி ஷேகமும் சீரான ஆவிக் குரிய வாழ்வும் இல்லாதவர் கள் சபைக் கூடி வருதலை விட்டு விடுகிறார்கள்.

- திடீரென உற்சாகத்தின் மிகுதி யில் மூன்றாவது வானம் வரை போய் வருகிறார்கள். அடுத்த சில நாட்களிலேயே அதல பாதாளத்தில் படுக்கை போட்டு படுத்துக் கொள்கிறார்கள். இது ஆவிக்குரிய வாழ்வில் ஆபத்தான பகுதி..., **ஜோராக ஒடுவதை விட சீராக ஒடுவது ஜீவி கிரிடத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.**
- சிலர் சத்தியம் சரியில்லை; இதை விட மேலான சத்தியம் அங்கு உண்டு என கூறி சபை சபையாக ஏறி இறங்குவார் கள். இரண்டு எழுத்து சபைக்கு ஆரம்பத்தில் போன ஒரு வர்; பிறகு மூன்று எழுத்து சபைக்கு சென்று..., இறுதியில் சீயோ னுக்கு போகிற சபை என ஒன்றைக் கண்டுப் பிடித்து.., கடைசியில் அதுவும் சரியில் லை எனச் சொல்லி கல்லறைக் கே போய் சேர்ந்தார்.
- இப்படியாக மார்க்கம் தப்பி அலையும் நட்சத்திரங்களுக்கு எதுவுமே சரியாக அமைவது இல்லை. முதலில் தன்னை சரிபடுத்திக் கொண்டு பிறகு மற்றவர்களை கவனிக்க வேண் டும். தேவன் புனிதனுக்கு புனி தனாக; மாறு பாடு உள்ள வனுக்கு மாறுபாடு உள்ளவ ராக இருக்கிறார்.
- ஆக..., மனிதன் மாறுபடுகிற வனாய் இருந்தால் தேவனும் மாறுபாடு உள்ளவராகத் தான் தோன்றுகிறார். நல்ல மனித னுக்கு நல்ல தேவன், நல்ல உறவுகளை, நல்ல சபை யை, நல்ல மேய்ப்பரைத் தருவார். என்பதில் சந்தேகமே இல்லை.
- ஒரு விசுவாசி சரியான சபை யை கண்டுபிடிக்க வேண்டும். இந்த பாஸ்டர் இறுதிவரை என் ஆத்துமாவுக்கு உத்திர வாதியாக இருந்து என்னை நடத்துவாரா? என் துன்பங் களில் பங்கு எடுத்து, ஆலோ சனைச் சொல்லி ஆறுதல் படுத்தி; பரம இராஜ்ஜியத் தை அடைய தகுதிப்படுத்து வாரா? என நிதானிக்க வேண்டும்.
- நம்மை எச்சரித்து, கண்டித்து, புத்தி சொல்லி திருத்தி மண வாட்டியாக உருவாக்கும் சபையாக இது இருக்குமா? அந்த ஆத்தும பாரம் மேய்ப்பனு க்கு உள்ளதா? உங்கள் ஆவிக்கு இது ஒத்து வருமா? என அலசி ஆராய்ந்து அதன் பிறகு சேர வேண்டும்.

- அடுத்து சபை மேய்ப்பரோடு உள்ள ஐக்கியம் உறுதியான தாக, உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். ஆடுகளுக் கும் மேய்ப்பருக் கும் எதனால் சண்டைகள் வருகிறது. என நிதானித்து பார்த்து...., முன்ன மே அவைகளை தவிர்த்து விடலாம். முக்கியமாக எல்லைக் கோடுகள் இருபக்கமும் இருந் தால்...., கண்மூடித்தன மான கிழ்ப்படிதல் இருந்தால் இடறல் கள் வருவது குறையும்.

- பாஸ்டரின் மனைவி, பிள்ளை கள், என அவர்களோடு மற்ற வர்கள் போட்டி போடுவதி னாலும் இடறல்கள் வரலாம். ஆகவே மனிதர்களை மாதிரி யாக நினைத்து வாழாமல் அடிச்சுவடுகளை வைத்துப் போன இயேசுவே மாதிரி யாக இருக்க வேண்டும்.

- சக விசுவாசிகளுடன் உள்ள ஐக்கியம் பாதிக்கப்பட்டா லும்; சபை கூடி வருதலை விட்டுவிடுகிறார்கள். பழகும் போது பார்த்து பழகனும்; ஏனெனில் **சபை உறவு கள் பரலோகம் போகின்ற வரை நம் மை தொடர்ந்து வரும் உறவுகள்.**

- குடும்பத்திற்குள் கணவன் மனைவி சண்டை போட்டுக் கொண்டு நான் இன்று ஆலயத் திற்கு வரவில்லை நீ போ எனச் சொல்லும் கணவனும், மனைவியும் இருக்கிறார்கள். கணவன், மனைவி, பிள்ளை கள் என மூன்று பக்கமும் ஆளுக்கொரு சபைக்கு செல் வார்கள். ஆனால் பாடல் பாடும் போது ஒரு மனம் ஒற்றுமை, ஏக சிந்தை என பாடும் போது..., அடக்க முடி யாத சிரிப்புதான் வரும்.

- தேவனுடன், சபையுடன், மேய்ப் பருடன், ஒரு விசுவாசி வைக் கும் உறவு, உடன்படிக்கையின் உறவு என்பதை உணர வேண் டும். இருவரில் யார் சரியில் லை என்றாலும் கூட உடைக் கப்படமுடியாத உறவு இந்த உடன்படிக்கை உறவு.

- கல்யாணத்திற்கும், கல்லறைக் கும், சில்லறைக்கும் சம்பாதிக் கவும் தான் சபை என்று தப்புக் கணக்கு போடக் கூடாது. அது போல கிறிஸ்துமஸ், புது வருடம், ஈஸ்டர், என பண்டி கைக்கு மட்டுமே சபைக்கு வரும் விசுவாசிகளும் உண்டு. இவர்கள் செல்லமாக அழைக்க படுகிறார்கள்.

- சிலர் சபைக்கு வந்ததும் யார் பெரியவன்? என வாக்கு வாதத்தில் ஈடுபட்டு தனது பெருமையை சபைக்குள் நிலைநாட்ட முயற்சிப்பார் கள். இவர் எந்த திருமணத்திற்கு சென்றாலும் தானே மாப் பிள்ளையாக இருக்க வேண் டும் எந்த சாவு வீட்டுக்கு சென்றாலும் தானே பிண மாகவும் இருக்க வேண்டும்.



- அதாவது .தான் தான் மிக முக்கிய மான ஆள் தன்னை சுற்றி மற்றவர் கள் புகழ்ந்து பேச வேண்டும் என்ற ஆசை யோடு அலைவார்கள். இப்படிப் பட்டவர்கள் சபையில் இறுதி வரை நிலைத்து நிற்காமல் பாதியிலே இடறல் அடை வார்கள்.

- இத்தகைய கண் சொருகிப் போன குருடர்களுக்கு மனமும் மறுத்துப் போவதால் தாழ்மை என்பது இவர் களுக்கு மாயமான தாழ்மை யாகவே இருக்கும்.

- ஜனங்களுக்குள் அங்கும் இங்கும் கோள் சொல்லி திரி யும்; ஆட்களும் அவர்களிடம் கோள் கேட்கும் காதுகளும் வேரோடு அறுப்புண்டு போ கும். சபைக்குள் இவர் கள் கூடி வராதபடி கோடாரி யானது இவர்கள் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கும். ஆகவே சக விசுவாசிகளுடன் பேசும் போது தேவ வசனங்களை மட்டுமே பேசிபழகுங்கள். கோள் சொல்லி திரியா திருங்கள்

- சபைக்குள் வீணான வாக்கு வாதங்கள் செய்யும் பழக்கம் வேண்டவே வேண்டாம். எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும் இப்படிப்பட்ட வழக்கம் இல்லை என்று *1கொரிந்தியர் 11:16*ல் பவுல் சொல்லுகிறதைக் கேட் கிறோம்.

- ஆகவே வாக்குவாதம் செய்து யாரையும் ஆதாயப்படுத்தவும் முடியாது வருகைக்கு என ஆயத்தம் செய்யவும் கூடாது. ஆகவே இப்படிப்பட்ட கசப்பு கள் இதயத் திற்குள் வராம லிருக்க வீணான வாக்குவாதங் கள் நிறுத்தப்பட வேண்டும்.

- நமது ஊர்காரர், எனது நாட் டைச் சேர்ந்தவர், ஒரே ஜாதி, எல்லோரும் தூரத்துச் சொந் தங்கள் என்று மாமிசத்தின் படி யோசித்துச் சபை கூடி வருதல் கூடவே கூடாது.

- இயேசு கிறிஸ்து பிரிந்து இருக் கிறார். என்றே பொருள். *1கொரிந்தியர் 1:12,13*, கேட் கப்படும் முதல் கேள்வி..., இனத் தால் ஜனத்தால் ஊரின் பெய ரால் கிறிஸ்துவை கை வேறாக, கால் வேறாக ஆள் ஆளுக்கு பிரித்து பிரித்து வைத்திருந்தால் தேவ கிரியை கள் வெளிப் பட இயலாது.

- திலிருந்து பிரிந்து இருக்கிறாரா? அல்லது உங்களால் பிரிக்கப்பட்டு இருக்கிறாரா? என்ற கேள்விக்கு பதில் நீங்களே சொல்லுங்கள்.

- நீங்கள் வியாதிப்பட்டால் மருத்து வர்களை வரவழைக்கும் முன்னர், சபையின் மூப்பர்களை மேய்ப்பர்களை வரவழையுங்கள். அவர்கள் கர்த்தரின் நாமத்தில் எண்ணெய் பூசி ஜெபிப்பார்கள். நீங்கள் வியாதிப்பட்ட தகவல் யாருக்கும் சொல்லாமல் இருந்து விட்டு...., பிறகு என்னை வியாதியில் விசாரிக்க வரவில்லையே என ஏங்கி சபை கூடிவருதலை விட்டு விடாதிருங்கள்.

**ஆம் பிரியமனாவர்களே!**

- நீங்களும் சபை கூடிவருதலை அசட்டை செய்யாமல் ஆண்டவர் இயேசுவை ஆராதித்து சபை களிலே அவருக்கு துதி உண்டாகும்படி செய்யுங்கள்.


- நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறார்களோ அவ்வளவாய் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். இது வேத வசனத்தின் கட்டளை அல்ல வா?

- நான் யாருக்கு போய் புத்தி சொல்ல போகிறேன் என நீங்களே குறைவாய் மதிப்பிடாமல் உங்கள் சபையில் யார் யார் கூடி. வருதலை விட்டு விட்டார்களோ அவர்களில் ஒருவரையாவது திருப்பிக் கொண்டு வந்து ஆராதிக்கும்படி செய்யுங்கள். அல்லேலூயா!

- சபையை மத்திய ஆகாயத்திற்கு மணவாட்டியாய் அழைத்துச் செல்ல இயேசு மணவாளனாய் சீக்கிரமாய் வருகிறார்.

- சபைக்குள் கற்புள்ள கன்னிகையாக, ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மனைவியாக இருந்து, உங்கள் பரிசுத்தம் காத்துக் கொண்டு வருகையை எதிர் நோக்கி காத்திருங்கள்!

- ஆவியும் மணவாட்டியும் வா என்பார்களாக! ஆமென் இயேசுவே சபையை அழைத்துச் செல்ல சீக்கிரமாய் வாரும்!





அத்தியாயம் 2

# விசுவாசிகளுக்கு வரும் இடறல்கள்

- இடறல்கள் என்ற வார்த்தை இக்கடைசி காலத்தில் இன்னும் ஒரு முறை கூட நாம் தியானிக்க வேண்டிய வார்த்தை.

- எந்த தலைமுறையைக் காட்டிலும் இந்த தலைமுறை மக்கள் ஆசீர் வதிக்கப்பட்டவர்களே! ஏன்? இது ஆவியானவரின் அருள்மாரி அளவில்லாமல் ஊற்றப்படுகிற காலம்.

- எழுப்புதல் என்ற பேச்சு எங்கும் கேட்கிறது. இரட்சிப்புக்காக இந்தியா இன்னும் காத்திருக்கிறது. எத்தனை ஊழியங்கள் இருந்தாலும் எவ்வளவு ஊழியர்கள் எழும்பினாலும் ஏன் இன்னும் எதிர் பார்த்த அளவு அறுவடை இல்லை.

- இயேசுவிடம் வருவோரின் எண்ணிக்கை ஒருபுறம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருந்தாலும், இடறல்கள் அடைந்து பின் மாற்ற நிலை அடைகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

- இடறல்கள் வருவது அவசியம். இது இயேசுவே சொன்ன வார்த்தை (மத்தேயு 18:7) ஆனால் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ எனவும் எச்சரித்தார்.

- இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன். என ரோமர் 9:33 கூறுகிறது ஆகவே, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து இறுதியாக தேவனை சந்திக்க சீயோனுக்கு செல்லும் போதும் இடறிப் போக வாய்ப்பு உண்டு.

- இடறல்கள் என்பது ஒவ்வொருவருக்கும் ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் தெளிவான எண்ணங்களும், உறுதியான தீர்மானமும் உள்ளவர்கள் இடறிபோகும் வாய்ப்புகள் குறைவு

- இரட்சிப்பின் அனுபவத்தை பெற்ற உடனே யாவரும் சற்று சந்தோஷமாக உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பார்கள். இப்போது தேவனுடைய ஊழியர்களை இவர்கள் தேவனது ஸ்தானத் தில் வைத்து பார்ப்பார்கள். திடீரென ஊழியரிடம் ஒரு குற்றத்தை பார்த்தவுடனே இடறல் அடைவார்கள். இது விசுவாசிகளிடம் காணும் முதல் இடறல். தேவன் தேவன் தான்.

தேவ ஊழியர் தேவ ஊழியர் தான். தேவ ஊழியரை கடவுள் ஸ்தானத்தில் வைத்து பார்த்தது இவர்கள் தவறு தானே?

- ஆகவே மனிதர்களை கடவுள் ஸ்தானத்தில் வைத்து பார்க்கும் பழக்கம் கூடாது. எல்லோருடைய கால்களும் தரையில் தான் இருக்கின்றது. இங்கு யாரும் தேவ தூதர்கள் அல்ல. எல்லோரும் தவறு செய்ய வாய்ப்பு உடையவர்களே!

- சபைக்கு வந்த ஒரு விசுவாசி அந்த அம்மா ஏன் இப்படி உடை உடுத்தி இருக்கிறார்கள்? ஆகவே அவர்களைப் பார்த்ததும் சபையில் என்னால் துதிக்க இயலவில்லை. பாட இயலவில்லை என புலம்பினார்.



- மற்றவரது உடை, நடை, பேச்சு, பிரசங்கம், அனைத்தும் விசுவாசியினால் அளக்கப்படுவது அடுத்த தவறு, எல்லோரும் தேவனின் பிள்ளைகளே! ஆனால் அவர்கள் அழைப்பு வேறு நம் அழைப்பு வேறு என்பதை உணர வேண்டும்.

- ஒருவரைப் பற்றி நிதானிப்பது வேறு. குற்றப்படுத்துவது என்பது வேறு. கண்டிப்பது வேறு. காயப்படுத்துவது என்பது முற்றிலும் வேறு. திட்டுவது வேறு திருத்து வது என்பது முற்றிலும் வேறு. ஆகவே மற்ற மனிதர்களின் உடை, நடை, உங்களுக்கு இடறல் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

- தேவனுடைய சபைக்கு இடறலற்றவர்களாயிருங்கள் என்பது பக்தனாகிய பவுல் தரும் ஆலோசனை (1கொரிந்தியர் 10:33) ஊழியரின் பிள்ளைகளை பார்த்து விசுவாசிகள் இடறல் அடைவதும் விநோதமான காரியமே! அப்பாவின் பக்தியை பிள்ளைகளிடம் காணவில்லையே என்றால் அப்பாவின் அனுபவங்கள் பிள்ளைகளுக்கு உண்டாகவில்லையே ....,

- இந்த பிள்ளைகள் எல்லாமே கண்டிப்பில் வளர்ந்த படியால் எப்போதும் சுதந்திரமாக சுற்றலாம் என வேலியை உடைத்துக் கொண்டு ஓட துடிக்கிறார்கள். இவர்களுக்கு பணம் பாசம் பரிசுத்தம் எல்லாமே டேக் இட் ஈசி பாலிசி தான். அதன் அருமை அவர்களுக்கு புரியாததால் ஊழியக்காரரின் பிள்ளைகளுக்கு எல்லாமே இலகுவாத் தெரியும்.

- அகவே ஊழியக்காரர் அவரது மனைவி, அவரின் பிள்ளைகள் ஆலயத்திற்குள் வரும் விசுவாசிகளுக்கு இடறல்களை; தடைகளை உண்டாக்காதபடி கவனமாக இருப்பது அவசியம். ஏலி என்கிற தேவ ஊழியர் தன் பிள்ளைகளை எச்சரித்து வளர்க்காததால் வரும் இடறல்கள் சாமுவேல் அதே பாவத்தை செய்ததால் வரும் பிரச்சனைகளை வேதத்தில் வாசிக்கிறோமே!

- முதலாவது தேவ ராஜ்யத்தை கட்ட நினைக்கும் ஊழியர்கள் உலகம் முழுவதும் ஆதாயப்படுத்தியும் தன் மனைவியை நஷ்டப் படுத்தினால் லாபம் என்ன? என்பதை உணர்ந்து கொள்வது அவசியம் அதைவிட தன் பிள்ளைகளை பக்தியுள்ள சந்ததியாக மாற்றுவதும் தனது முதலாவது ஊழியம் என்பதை அறிய வேண்டும்.

- ஊழியரின் குடும்பம் சுயபிரயோ ஜனத்தைத் தேடாமல் மற்றவர்களின் பிரயோஜனத்தை தேட வேண்டும். அவர்கள் இரட்சிப்பில் பூரணப்படும்படி.., வழிநடத்த வேண்டும்.



## அடுத்த கட்ட இடறல்

- ஒரு விசுவாசி சக விசுவாசியைப் பார்த்து ஒப்பிட்டு தன்னைத் தானே சுய மதிப்பீடு செய் தல். தவறானது

- அந்நிய பாஷையில் ஆடுகிறாரே.... இவரா! இப்படி வாயைத் திறந்தால் வசனமாக பேசுகிறாரே; அவரா அப்படி? முட்டி போட்டால் ஜெபத்தை சீக்கிரத்தில் முடிக்கவே மாட்டாரே, அந்த சகோதரியா?

- இது மாதிரியான எண்ணங்கள். இடறல்களுக்கு ஏன் காரணமாகிறது? இவர்களது கண்கள் இயேசுவின் மேல் பதிக்கப்படாமல், பக்கத்தில் உள்ள ஆட்கள் மேல் இருப்பதால் தானே? மற்றவர்கள் எந்த விதத்தில் உங்களுக்கு இடறல்களை உண்டாக்குகிறார்களோ; அந்த இடறலான விஷயம் உங்களிடம் இல்லாதிருக்கப் பாருங்கள். எல்லாமே சரியாகி விடும்.

- மத்தேயு 18:6/மாற்கு 9:42/ லூக்கா 17:2மூன்று இடங்களிலும் இயேசு முக்கியப்படுத்தி சொல்லுவது:

- இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ..., அவனுடைய கழுத்

தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

- சமுத்திரத்தின் ஓரத்தில் போட்டால் அலைகளில் நீந்தி கரைக்கு வந்து விடுவார்கள். பிறகு இன்னொருவனுக்கும் இடறலை உண்டாக்குவார்கள். ஆகவே இடறலை உண்டாக்குகிறவன் திரும்ப திரும்ப வராதபடி சமுத் திரத்தில் நடுவிலே போடுவது அல்ல ஆழ்கடலில் அமிழ்த்த வேண்டும் என்பது இயேசுவின் ஆசை. லூக்கா *22:22;* யோவான் *17:12*

- எனவே, எந்த சிறியரையும் அற்ப மாய் எண்ணாதபடிக்கு எச்சரிக் கையாய் இருப்போ ம். என்னால் எந்த நிலையிலும் யாருக்கும் இடறல் வரவே கூடாது என்று ஒரு நிமிடம் கண்களை மூடி ஜெபித்துக் கொண்டு பிறகு தொ டர்ந்து வாசியுங்கள்.

- நான் புசிக்கிற போஜனம். என் சகோதரனுக்கு இடறல் உண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறல் உண்டாக்காதபடிக்கு என்றைக்கும் மாமிசம் புசியா திருப்பேன். *1*கொரிந்தியர் *8:13*

- பரிசுத்தவானாகிய பவுலின் தீர் மானத்தை படித்தீர்களா? நம்மவர்களுக்கு மாமிசம் புசிக்காவிட்டால் நாக்கே செத்துப் போனது போல் இருக்கிறது.

- கன்வென்ஷன் தொடங்கி கல்யாணம் வரை அந்த மஞ்சள் சோறு... அது தான் அந்த பிரியாணி இல்லாவிட்டால் இவர்கள் பேசும் பேச்சை கேட்கவே காது செவிடாகிவிடும்! மட்டன் பிரி யாணிக்காகவே சிருஷ்டிக்கப் பட்ட மக்கள் இவர்கள் தான் என என்னிடம் கிண்டலடித்தார் ஒருவர்.

- சில விசுவாசிகள் ஊழியரின் பிரசங்கத்தை கேட்டு இடறல் அடைவார்கள். இவர்களுக்கு காலமெல்லாம் இயேசு உங்கள் கண்ணீரைத் துடைப்பார் கரங்களைப் பிடிப்பார். கலங்காதிருங்கள் என இப்படி பிரசங்ம் செய்தால் ஆஹா என்ன சுகம்? என்ன இன்பம் இதுவல்லவா பிரசங்கம். எத்தனை பெரிய ஆறுதல் என சிலிர்த்து கொள்ளுவார்கள்.

- வேதத்தின் உபதேசங்களை எடுத்துச் சொல்லி மனம் திரும்புங்கள். மனதை திருத்திக் கொள்ளுங்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறுங்கள். தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளுங்கள். பரிசுத்த திருவிருந்து பந்தியில் பங்கெடுங்கள் என்று பிரசங்கம் செய்தால் பாருங்களேன் அதைக் கேட்கவே இஷ்டம் இருக்காது.

- ஆண்டவராகிய இயேசு யோவான் *6:48*ல் ஜீவ அப்பம் நானே எனத் தொடங்கிவானத்திலிருந் திறங்கின அப்பம் இதுவே என்றார். உடனே ஒவ்வொருவராய் இடறல் அடைந்து. இயேசுவின் உபதேசம் தாங்க முடியாமல் கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள் யோவான் 6:60

- இதற்குப் பதிலாக ஊழியக்காரர்கள் தங்களது சொந்தக் கதை, சோகக்கதை, குடும்பக் கதை, ஊர்கதை, என கதைகளை சொன்னால் அப்படியே மெய்மறந்து ரசிப்பார்கள்.

- இறுதி நாட்களில் ஜனங்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக் கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்த்துக் கொண்டு...., ஐயோ என் இதயத்தை பாரம் அழுத்துகிறதே என்ன சொல்லு வது?

- இவனே இந்த ஜனங்ளுக்கு ஏற்ற தீர்க்க தரிசியாய் இருப் பான் என்றும் வேத வார்த் தை சொல்லுகிறதே! ஜனங்களுக்கு ஏற்றவிதத்தில் இல்லாத தீர்க்க தரிசி பிழைக்கத் தெரியாத ஊழியராக கருதப்படுவார்.

- இந்த போதகர் இப்படிச் சொன்னால் என்ன? என்னை கண்டித்து பேசாத ஒரு போதகரை நானே தேடிக் கொள்கிறேன் என சென்னையில் சில விசுவாசிகள் சுற்றுவது மற்றவர்களுக்கு மிகப்பெரிய இடறல்.

- கல்யாணத்திற்கு ஒரு போதகர். கல்லறைக்கு ஒரு போதகர் இவர்களது தவறுகளை சுட்டிக் காட்டாமல் சுகமாய் ஆசீர்வதித்து பேச ஒரு போதகர் என திரளாய் சோர்ந்துக கொள்கிறார்கள். பின்னர் பார்த்தீர்களா? எங்கள் வீட்டுக்கு எத்தனை போதகர்கள் வந்து போகிறார்கள். ஆகவே நானே பெரிய விசுவாசி என இறுமாப்பாய் இருப்பவர்களுக்கு எந்திரக்கல் உண்டு என்பதை மறந்து போக வேண்டாம்.

- இக்கால விசுவாசிகள் இடறலடையை அடுத்த காரணம் *1*பேதுரு *2:8*படி திருவசனத்திற்குக் கீழ்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்.

- டாக்டர்கள் சொன்னால், வக்கீல் சொன்னால் உலக மனிதர்கள் ஏதேனும் சொன்னால் கீழ்ப் ப டி யு ம்



விசுவாசிகள் வசனம் சொல்லுகிறதற்கு கீழ்ப்படிவது என்பது ஏதோ பெரிய கஷ்டமாக இருப்பது போல் உணருகிறதே இடறலுக்கு வழி வகுக்கிறது.

- சில வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைவார்கள் என மத்தேயு *13:21*ல் வாசிக்கிறோம்.

- வேத வசனத்திற்காக வாழ்ந்து காட்டும் விசுவாசிகள் உபத்திரவமும் துன்பமும் உண்டான உடனே இன்பம் அடைவார்கள்.

- இயேசு என் கண்ணீரைத் துடைக்கிறவர் ஆனபடியால் அவருக்காக காலமெல்லாம் அழ, கண்ணீர் சிந்த ஆயத்தம் என என் சபை விசுவாசி என்னிடம் சொன்ன போது என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்தது.

- வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை; சங்கீதம் *119:165*

- கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்படும் அன்று இராத்திரியிலே நீங்கள் எல்லோரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்; என்றார் தம் சீஷர்களைப் பார்த்து.

- அதற்கு பேதுரு உமது நிமித்தம் எல்லோரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றார்.



கடைசியில் மூன்று முறை மறுதலித்தார்.

- நான் திருமணம் செய்யாமல் ஊழியம் செய்யப் போகிறேன் என்று உணர்ச்சி வசப்பட்டு பேசி சபையில் ஒப்புக் கொடுத்த சகோதரி..... இன்று மூன்று பிள்ளைகளுடன் குடும்பம் நடத்துகிறதைப் பார்த்த போது அநேகர் இடறல் அடைய நேர்ந்தது. அந்த ஒருவரால் அநேகருக்கு தலை குனிவு.

- ஊழியத்திற்கு வருகிறேன். இனி நகை தேவையே இல்லை; உலக வேலை எனக்கு குப்பையாய் தோன்றுகிறது. எப்போதும் வெள்ளைத் துணி தான் என் உடை, காவிதான் என்ற பிரதிஷ்டைகள் அவரவர் சொந்த பிரதிஷ்டை தனிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் இதை உணர்ச்சி வேகத்தில் சொல்லி விட்ட இவர்கள் மாற்றினால் இதை பார்ப்போருக்கு இடறல் உண்டாகும் தேவ நாமமும் தேவ மனிதர்களும் தூஷிக்கப்பட காரணமாக இருக்கிறது.

- திடீரென ஒருவர் தன் மீசையை எடுத்து விட்டார். ஏன் என்பதற்கு அவர் சொல்லும் காரணம் அவரது மீசையைப் பார்த்து சகோதரிகள் இடறல் அடைவார்களாம் சரி! வேறு யாருடைய மீசையைப் பார்த்து அவர்கள் இடறல் அடைந்தால் இவர் என்னச் செய்வார்?

- இப்போது எல்லோரும் மீசையை எடுக்க வேண்டும் என்று பிரசங்கித்துக் கொண்டு இருக்கிறார்கள். மீசையே இல்லாதவர்கள் எதை எடுப்பது என்பது வேறு. பிரச்சனை அவருக்கு மீசையில் மட்டும் தான். பரிசுத்தம் இருக்கிறது இனி இவர் மீசை வைக்க ஆசைப்பட்டு வைத்தால் இவருக்கும் இடறல், இவரால் மற்றவர்களுக்கும் இடறல்.

- விசுவாசிகள் உணர்ச்சி வசப்படும் வாழ்க்கையை சிலுவையில் அறைந்தால் அதுவே ஆசீர்வாதத்திற்கு வழிநடத்தும்.

- ஒருவரும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ரோமர் *14:13*

- பெற்றோர் பிள்ளைகளை ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்பது பிள்ளைகளுக்கு வரும் இடறல்கள். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி தேவ அழைப்பை பெற்று ஆத்தும பாரத்துடன் ஊழியத்திற்கு செல்வது வேறு விஷயம்; இவர்களாக பிரதிஷ்டை என்ற பெயரில் ஊழியத்துக்குள் கொண்டு வர இயலுமா? இது போல இடறல்களை உண்டாக்காதீர்கள்.



- ஆதி அப்போஸ்தல சபையில் வந்த முதல் பிரச்சனை விதவைகள் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்பதே

- இக்காலகட்டத்திலும் சபைக்குள் ஏற்படும் சாப்பாட்டு பிரச்சனைகள் விசுவாசிகளை இடறல் அடையச் செய்கின்றன. சாப்பாடு காரியங்கள் சபையின் மேய்ப்பர் தலையிடாமல் மூப்பர்கள் வசம் ஒப்படைத்து பார்த்துக் கொள்ளும்படி செய்யலாம்.

- காணிக்கை விஷயத்தில் புதிதாக வருபவர்கள் இடறல் அடைகிறார்கள். முக்கால் மணி நேர செய்தியில் மூன்று குறிப்பும் பணம் பணம் என்று தொந்தரவு செய்கிறார்களே, என மனம் நொந்து சலித்து இடறல் அடைகிறவர்களும் உண்டு.

- சபைக்குள் கொடுக்கல், வாங்கல், கடன் கொடுத்த பணம் வராத நிலை, இருக்குமானால் இடறல்கள வருகிறது. இவ்விஷயத்தில் அனனியா, சப்பீராள் போல பரிசுத்தாவிக்கு விரோதமாய் பொய் சொல்லுகிறவர்களும் உண்டு.

- சபைகள் தவறான பால் உணர்வு பழக்கங்கள், சந்தேக எண்ணங்கள் எழும்பி வேசித் தன விபச்சார ஆவிகள் இடறல் அடையச் செய்கின்றன. ஆக வே ஆலயத்திற்குள் ஆண், பெண் உறவுகள் கண்ணியமாக இருக்க வேண்டும்.

- கலாத்தியர் சபையில் காணப் பட்டது போல நியாயப்பிர மாண கிரியைகாரர்களாய் பாரம்பரிய பழக்க வழக்கங் களால் ஆத்துமாக்கள் இட றல் அடைவது உண்டு. ஜாதி சண்டைகள், கலாச்சார வேறு பாடுகள் பிரிவினைகள், கசப் பான வைராக்கியங்கள் இருந் தால் அதனால் அநேகர் இடற ஏதுவாக இருக்கும்.

- விசுவாசிகள் திருமண நேரங் களில் தெளிந்த எண்ணம் இல்லாததால் இடறல் அடை கிறார்கள். என்ன தான் திரு மணங்கள் சொர்கத்தில் நிச்சயிக் கப்பட்டாலும், அவைகள் நடப்பது என்னவோ பூமியில் தானே?

- ஆகவே விசுவாசம் என்ற பெயரில் நடை முறை யதார்த் தத்தை விட்டு விலகி ஏதோ மாய உலகில் சஞ்சரிக்கின்றனர்.

- எல்லோருக்கும் அழகான பெண், மாப்பிள்ளை தான் தேவை. அதற்காக தாங்கள் எப்படி இருக்கிறோம் என்ற சுயபரிசோதனையில் ஈடுபடு வதே இல்லை. அதிகமான பணமும் வேண்டும். இப்படி யாக இங்கு எல்லாமே மாமிச கிரியைகளின்படி நடந்து விட்ட...., பிறகு எப்படி கர்த் தரால் இந்த காரியம் நடக்கும்? ஆகவே இவர்களுக்கும், இவர் கள் மூலம் மற்றவர்களுக்கும் இடறல் இல்லாமல் இருக்க வேண்டும்.


- **திருமணம் அடக்க ஆராதனை யும் ஒரு தேவ பிள்ளையின் ஆவிக் குரிய அளவை, நாடித் துடிப்பை அளந்து பார்க்கும் சம்பவங்கள் ஆகும்.**

- அன்பாக நாலு வார்த்தை மற்றவரிடம் பேசத் தெரியாத ஒருவர் எவ்வளவு அந்நிய பாஷை பேசினாலும் இவரால் மற்றவர்களுக்கு இடறல்கள். தேவனோடு இரகசி யங்களை ஆவியில் பேசுகிற இவருக்கு மனிதர்களிடம் உண்மை ஒரு வார்த்தை பேச தெரிய வில்லை யே என புலம்புகிறார்கள்.

- சுய வெறுப்பின் அடிப்படை யில் நகை கழற்றினேன் என்று வீர வசனம் பேசிய சகோதரியி டம் சாந்தம் எனும் அணிகலன் இல்லவே இல்லை.

- இந்த உலகம் வெளிப்படை யான தோற்றத்தை வைத்து






ஆவிக்குரிய தரத்தை எடை போடுவதால் இடறல் அடை கிறது.

- விசுவாசிகள் கர்த்தரின் சாயலா கத்தானே மகிமை அடைந்து மறுருபப்படுகிறோம். இயேசு வெளிப்படும்போது அவர் இருக் கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்து இடறல் இல் லாத வாழ்க்கையை கேட்போம்.

- மற்றவர்களுக்கு நம்மால் இடறல் வராத படி வாழக் கற்றுக் கொள்வோம்.



## சபையின் விசுவாச பிரமாணம்

**1தீமோத்தேயு 2:5**
தேவன் இருக்கிறார்

**மத்தேயு 3:17**
குமாரன் இருக்கிறார்

**யோவான் 14:6**
ஆவியானவர் இருக்கிறார்

**லூக்கா 13:15**
மனந்திரும்புதல் அவசியம்

**மாற்கு 16:16**
ஞானஸ்நானம் அவசியம்

**அப்போஸ்தலர் 19:2**
ஆவியின் அபிஷேகம் அவசியம்

**2கொரிந்தியர் 6:14-18**
வேறுபாட்டின் ஜீவியம் அவசியம்

**அப்போஸ்தலர் 2:47**
ஆவிக்குரிய சபையில் அங்கமாக இருப்பது அவசியம்

**எபிரெயர் 10:25**
சபை கூடிவருதல் அவசியம்

**அப்போஸ்தலர் 1:8**
சாட்சி பகருதல் அவசியம்

**கலாத்தியர் 5:22-23**
கனிகள் அவசியம்

**யோவான் 6:53-54**
திருவிருந்தின் ஐக்கியம் அவசியம்

**1பேதுரு 1:16**
தசமபாகம் கொடுத்தல் அவசியம்

**1தெசலோனிக்கேயர் 4:16-18**
இயேசுவை சந்தித்தல் அவசியம்

அத்தியாயம் 3

# சாட்சி கொடுக்கும் போது செய்ய வேண்டியது.

- ...., **பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்** என்று நம் ஆண்டவராகிய இயேசு சொன்னார் அவருக்கென நீங்கள் சாட்சி சொல்ல தொடங்கு முன்னர் ஒரு முறை கூட...,
- அப்போஸ்தல நடபடிகளில் இருக்கிற வேதபகுதிகளில் பரிசுத்தவான்களாகிய பேதுரு, ஸ்தேவான், பவுல், போன்றவர்கள் சொன்ன சாட்சிகளை பலமுறை படியுங்கள். அதிகமாக தியானித்து குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் தனி ஜெபத்தில் தரித்து இருந்து உங்கள் பாத்திரத்தை உள்ளும், புறமும் சுத்தமாக்கிக் கொண்டு அதன் பிறகு பலி பீடத்தில் நிற்க பழகுங்கள்.
- ஐந்து பத்து நிமிடத்திற்கேற்ற விதத்திலும், அரை மணி நேரம், முக்கால் மணி நேரத்திற்கு ஏற்ற விதத்திலும் முன்னமே உங்கள் அனுபவ சாட்சியை எப்படி சொல்ல வேண்டுமென திட்டமிடுங்கள். சோம்பல் பார்க்காமல் ஒருவிசை எழுதிப் பார்த்து, பேசிப் பார்த்து, தவறுகளை திருத்திக் கொண்டு சபையில் கூட்டங்களில் பேசத் தொடங்குங்கள்.
- முதலாவது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் பணிவுடன் கூறி சிறு ஜெபத்துடன் தொடங்குங்கள்.
- உங்கள் குடும்பப் பின்னனியை தெளிவாக சொல்லுங்கள் எந்த ஊரில் பிறந்தீர்கள்? பிறந்த வருடம்? வயது அப்பா, அம்மா உடன் பிறந்தோர் விவரங்கள் சாட்சியின் நம்பகத்தன்மையை உறுதி செய்யும்.
- இரட்சிப்பின் அனுபவத்தை விபரமாக கூறுங்கள்; இயேசுவோடு நீங்கள் உறவு கொள்ள ஆரம்பித்த அந்த ஆரம்ப நாட்களில் இருந்த மனநிலையை தெளிவாக சொல்லுங்கள்.
- தேவன் செய்த முதல் அற்புதம், அடுத்தடுத்து நீங்கள் வேத வார்த்தைக்கு கீழ்ப்படிந்து எடுத்த ஞானஸ்நானம், பரிசுத்தாவியின் அபிஷேகம், தேவனின் வழிநடத்துதலை சுவைப்பட சுருக்கமாக பேசுங்கள்.



- உங்கள் தனிப்பட்ட வாழ்வில் நடந்த திருமண காரியங்கள், பிள்ளைகள், படிப்பு, வேலை செய்யும் இடத்தில் நடந்த தேவனின் கிரியைகளை அறிவித்து கேட்டோரை உற்சாகப் படுத்துங்கள்.
- ஒரு வேளை நீங்கள் கிறிஸ்துவுக்குள் வந்து, வளர்ந்து, முதிர்ந்த இருபது முப்பது வருட ஆவிக்குரிய அனுபவங்களை உடையவர்களாய் இருந்தால் கடந்து வந்த பாதைகளில் ஏற்பட்ட மேடுபள்ளங்கள், ஏற்றத்தாழ்வுகள் அந்த சமயங்களில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை சொல்லுங்கள்.
- கசப்பான நேரங்களில் அது எப்படி மதுரமாய் மாறிற்று? கண்ணீரின் பள்ளத்தாக்கு எப்படி களிப்பாய் மாறிற்று? கடன் பிரச்சனை எப்படி மறைந்தது? என ஆவியில் நிறைந்து கேட்போருக்கு ஆறுதலாய் பேசுங்கள்.
- எதிர்காலத்தில் தேவனுக்காக செய்யபோகிற காரியங்களை திட்டங்களை, தரிசனங்களை தெரியப்படுத்துங்கள். மட்டுமல்ல உங்களுக்காக ஜெபிக்க வேண்டிய ஜெபக்குறிப்புகளையும் உங்கள் ஊழியங்களுக்கான பாரங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- முடிவாக சிறு ஜெபம் ஏறெடுத்து சாட்சியை சொல்லி முடிவுக்கு கொண்டு வாருங்கள்.

***மெய்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை இரட்சிக்கிறான். (நீதிமொழிகள் 14:25)***

### சாட்சி சொல்லும் போது செய்யக்கூடாதது

- இப்போது இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது. எனக்கு சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார் என்று யோபு 16:19ல் வாசிக்கிற வசனம் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்து இருக்க வேண்டும்.
- மெய்ச்சாட்சிக்காரன் பொய் சொல்லான்; பொய் சாட்சிகாரனோ பொய்களை ஊதுகிறான் என நீதிமொழிகள் 14:15 சொல்லுகிறது.
- ஆகவே சாட்சிகளை சொல்லும்போது...., மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அழுவது போல பாசாங்கு; பொய்யான தகவல்களை எதுவும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
- ஏனெனில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் சாட்சி சொல்லி முடித்தபின்னர் தான்..., பிரா



மண குலத்திலிருந்து வந்தவன் அல்ல எல்லோரும் என்னை இந்த மதப் பிரிவில் உயர்குல பிராமணன் என்று நினைக்க வே நானும் அப்படி பொய் சொல்ல நேர்ந்தது. என்னை மன்னியுங்கள் என்றார் ஒரு தேவ ஊழியர்.

- தெரிந்தே செய்யும் பாவங் களுக்கு என்ன தண்டனை என்பதை.., இவர்களுக்கு தெரிந்து இருந்தால் எத்தனை நல மாய் இருக்கும். இனி தேவனுக் காககூட பொய் சாட்சி சொல்லாதிருப் பீர்களாக!



- ஆர்வக் கோளாறினால் தேவையில்லாமல் விக் கிரங்களைப் பற்றி பேசக்கூடாது. அந்நிய தேவர் களின் நாமங்களை அவசியம் இல்லாமல் அதன் பெயரை யும் உச்சரிக்க கூடாது. புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வந்தவர்களிடையே அவை களை பேய், பிசாசு, சாத்தான் என நீங்கள் சொல்லுவதன் நிமித்தம் அவர்களது இரட் சிப்பு தடைபடும்.

- அதிகமாக பாவத்தை சொல்லி, மறைவான குற்றங்களை அந்த ரங்க காரியங்களை வெளிப் படையான அளவுக்கு மீறி பேச வேண்ட ாம்.

- ஜாதியை முக்கியப் படுத்தி, இலைமறை காய்மறையாக வோ கூட மற்ற ஜனங்களை தாழ்த்தி பேசக் கூடாது. ஜாதி பெயர்களை எந்த நிலை யிலும் உபயோகிக்க கூடாது. வீட்டின் பெருமையை ஊர் பெருமையும், நாட்டின் பெரு மையும் பேசினால் தேவ ஆசீர்வாதம் உங்களுக்கு வரு வது தடைபடும்.

- நான் இரட் சிக்கப் பட்ட பின்னர் எங்கள் குடும் பத்தில் உள்ளவர்கள் ஏன் அந்த தாழ்ந்த ஜாதியில் போய் சேர்ந்தாய்?. இனி உனக்கு யார் பெண் கொடுப்பார்கள் என்று திட்டினார்கள். ஆகவே வீட்டை விட்டு வெளியே வந்தேன் என்று ஒருவர் சாட்சி சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அந்த சாட்சியை கேட்டவர் களில் ஒருவர் எழுந்து ஆமாம் தம்பி நீ ஏன் எங்களை தாழ்ந்த ஜாதி என்று சொன்னாய் என்று கேள்வி கேட்டு சண்டைக்கு வந்து விட்டார்.

- ஆகவே அவை அடக்கம் அல் லது சபை அடக்கம் மற்றும் நாவடக் கமும் சாட்சி சொல்லு கிறவர்களுக்கு கட்டாயம் தேவை.



- அரசியல் கட்சி களைப்பற்றி யோ, சிங்களவர்கள், முஸ்லீம் கள் இந்துக்கள் என்று மற்ற மதத் தினரையோ; வேறு ஊழியங் களை, ஊழியக் காரர்களைப் பற்றியோ குறைத்துச் சொல்லி யாருடைய உள்ளத்தையும் காயப் படுத்த வேண்டாம்.

- உங்கள் சாட்சியை கேட்டு கொண்டு இருக்கும் சபை மக்களை, விசுவாசிகளை குற்றப்படுத்தி, மனம் புண் படுகிற விதமாக, மரி யாதை குறைவாக பேசக்கூடாது.



- தேவை இல்லாத இடங் களில் உணர்ச்சிவசப் பட்டு அழுவது அல்லது சிரிப்பது கேட்போரை எரிச்சலடைய வைக்கும். மக்களை உற்சாகப் டுத்துவதாக நினைத்து கொண்டு சிரிப்பை வரவழைக்காத கடி ஜோக்கு களும், அறுவை ஜோக்கு களும், சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லி சிரிக்கும் பழக்கமும் கூடவே கூடாது **பகைச்சுவையை உண்டாக் காத நகைச்சுவை** சாட்சியை கூடு தல் அழகாக்கும்.

- தேவ பிரச்சன்னத்தோடு பேசிக் கொண்டு இருக்கும் போது நடு வில் யாரேனும் இடையூறு தந்தாலும்; அவர் களிடம் குறும்பு செய்யும் குழந்தைகளிடம் உங்கள் கோ பம் போகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஏதா வது சொல்லப் போய்; தேவ பிரச்சன்னத்தை குலைத்து விடுகிறது.

- பேசும் போது வார்த் தைக்கு வார்த்தை அல்லேலூயா சொல்லி கேட்போரை சோர் வடை யவைக் காமல் உற்சாகப் படுத்தும் விதத்தில், துதிக் கும் விதத்தில் அல்லேலூயா சொல்லுவது ஏற்றது. கோடிட்ட இடங்களை நிரப்புவது போல் அடிக்கடி ஒரே வார்த் தையை உச்சரிக்க வேண்டாம்.

- மைக்கில் பேசும் போது ம், ஆ, உச், ச்சு, ஆ...., என்ற தே வையற்ற ஓசைகளை எழுப் பாமல், வாயோடு அல்லது உங்கள் வாய் அருகே மைக் கை வைத்து உபயோகிக்க கற்றுக்கொள்ளுங்கள். மைக் ஒரு பக்கம் நீங்கள் வேறு பக்கம நின்று கொண்டு பேசி னால் கேட்போருக்கு வார்த் தைகள் தெளிவாக புரியாது.

- அதிகப்படியான சத்தமும் வேண்டாம்; அதற்காக முனு முனுப்பது போல மெதுவாக பேசவும் வேண்டாம்.

- உங்கள் சொந்தக்கதை, சோகக் கதை, கதைக்குள் கதை என கதைக்க வேண்டாம் நீங்கள் கண்ட கனவுகள், சொப்பனங்கள், தரிசனம் போன்றவற்றை மாய தந்திரக் கதைகளை போலபேசுவதையும்தவிர்க்கவும்.

- எனக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. ஆகவே மேலும் நான் பத்து நிமிடம் எடுத்துக் கொள்ளட்டுமா என சபை மேய்ப்பரிடம் எல்லோர் முன்நிலையிலும் கேட்டால் அது தர்ம சங்கடமாகத்தான் இருக்கும். இது சரியில்லை.

- கொடுத்த நேரமே குறைவு என பரிதாபமாக சொல்லி முடிக்கவும் வேண்டாம். எனது சாட்சியை நான் சொல்லி முடிக்க மூன்று நாள் ஆகும் என்றார் ஒருவர். நான் சொன்னேன் அதை ஏன் கடந்த பத்து வருடமாக உங்கள் உறவினரிடம் சொல்லவில்லை என்று.....,

- சிலருக்கு மேடையும் கிடைத்து, மைக்கும் கிடைத்து, கேட்க கொஞ்சம் ஆட்களும் கிடைத்தால் இவரது ஆசைக்கு அளவே இல்லாமல் போகும்.

- சாட்சி சொல்லுவதைவிட சாட்சியாய் வாழ்ந்து காட்டுவது சிறப்பானது.



**சாட்சியாய் வாழ்வதைவிட இரத்த சாட்சியாய் இறப்பது அதை விட மேலானது**

- எந்த சபைக்கு சென்று சாட்சியோ, தேவ செய்தியோ கொடுக்க சென்றாலும், விசுவாசிகள் யாரிடமும் தனிப்பட்ட முறையில் பேசி முகவரி வாங்கும் பழக்கம்; உங்கள் முகவரிகளை அவர்களுக்கு தருதல், அவர்களோடு புகைப் படம் ஆலயத்திற்குள் எடுத்தல் சொந்த ஊழிய அழைப்புகள் என எதுவும் கூடாது. உங்களது சாட்சியை கெடுத்து விடும். ஆகவே இவைகளை தவிர்த்து விடுங்கள்.

- உங்கள் சாட்சி எல்லாம் அருமையாக சொல்லி முடித்து விட்டு, கடைசியில் கேசட், புத்தகம், விற்க தொடங்கினால் உங்கள் நோக்கமே தவறாகிவிடும் உங்கள் சாட்சி மேடையிலேயே காட்சிகளாக சிரிக்க தொடங்கும் ஊழியராக இருந்த நீங்கள் வியாபாரியாக மாறவேண்டாம்.

- கேசட் புத்தகம் போன்றவற்றை அந்த சபை போதகரிடம் தெரி வித்தால் அதற்கு என ஒரு தனி நபரை நியமித்து மொத்தமாக விற்றுக் கொடு



க்க அவர் ஏற்பாடு செய்யலாம் பிதாவின் வீடு வியாபார வீடாக மாறினால் அது கடைசியில் கள்ளர்குகையாகி விடும் வாய்ப்பும் உள்ளது. ஆகவே இதில் அதிக கவன மாய் இருங்கள்.

- எப்போது சபை நடுவே சாட்சி சொன்னாலும், எப்படிப்பட்ட நிலையில் நீங்கள் இருந்தீர்கள். அந்நேரம் கர்த்தர் எதைச் செய்தார். அதனால் தேவநாமம் எப்படி மகிமைப்பட்டது என்று மாத்திரம் சுருக்கமாக சொல்லி பழகி னால்..., உங்கள் சாட்சி கேட் போரையும் விசுவாசத்திற்குள் ஊன்றக்கட்டும்; உணர்வுள்ளவர்களாக்கும்.

- சிலருக்கு மேடையில், தொலைக் காட்சியில் பத்திரிக்கையில் நம் பேரும், புகைப்படமும் வந்து, புகழ்கிடைக்கும் என நினைத்து சாட்சிகளை சொல்லுவதும் உண்டு. எழுதுவதும் உண்டு. இந்த உபாய தந்திரங்களை உபயோகிக்காதீர்கள்.

- நீதிமொழிகள் 19ம் அதிகாரம் 5ம் வசனமும், 9ம் வசனமும் ஒன்று போல இருக்கும் அதை வாசித்துப் பார்த்தால் உணர்வடைவீர்கள். **பொய்சாட்சிக்காரன் ஆக்கினைக்குதப்பான்.**

- கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை பலருடைய சாட்சிகளை சந்தேகம் கொள்ள செய்து விட்டது. மந்திரவாதிகள் போலிஸ்காரர்கள், முஸ்லீம்கள், உயர் குல பிராமணர்கள், உயர் அதிகாரிகள், சினிமா நடிகர்கள், அரசியல் வாதிகள் என்று எப் படி பல பிரிவினர் சாட்சி சொன்ன போது வாய்திறந்து ஆச்சரியமாய் பார்த்தார்கள். கேட்டார்கள்.

- ஆனால் நடந்தது என்ன? திடீர் திருப்பங்களுடன் மர்மமான முறையில் அவர்கள் சாட்சிகள் அலங்கோலமாகிப் போனது. ஒருவர் இரட்சிக்கப்பட்டு ஊரெல்லாம் சுற்றச் தொடங்கியவுடன் உலகமே இரட்சிக்கப்பட்டது போல ஒரு மாயத்தோற்றம் ஏற்படும்.

- ஜனங்கள் கொஞ்சகாலம் அந்த அனலில் குளிர்காய வந்து விட்டு வேறு அனல் கிடைக்குமோ என்று தேடுவார்கள்.

- எத்தனையோ சாட்சிகளைக் கேட்கும் அவர்கள் வாழ்வில் எந்த மாற்றமும் நிகழ்வது இல்லை. அவர்கள் மனக்கதவு சரியாகவும் இல்லை.

- ஆகவே நீங்கள் சாட்சி சொல்லும்போது உங்கள் மனது


உங்களுக்கு சொல்லும் சாட்சி யே உங்களுக்குப் புகழ்ச்சிய ாக இருக்கட்டும். 2கொரிந்தியர் 1:12

**வேத வசனங்களிலிருந்து சாட்சி யைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்.**

- பழைய ஏற்பாட்டில் பாடல், பலிபீடம், புஸ்தகம், தூண் போன்ற வைகள் சாட்சிக்கு அடையாளமாக இருந்தது. மட்டு மல்ல கல்லும், மர மாகிய உத்திரமும், வான மும் பூமியும், தூணும், சுவரும் சாட் சிக்கு ஆதரமாக விளங்கியது.
- புதிய ஏற்பாட்டில் நாமே **அவர் தேவன்** என்பதற்கு அடை யாளமான சாட்சி, அதற்கு பெலன் கிடைக்கதான் பரிசுத் தாவியானவர் தரப்பட்டார்; அவர் உங்களிடத்தில் வரும் போது வீட்டில், சபையில் ஊரில் ஏன் உலகம் முழுவ தும் சாட்சிகளாய் இருப்பீர்கள்.
- பரலோகத்தில் சாட்சியிடு கிறவர் மூவர் பிதா, வார்த் தை, ஆவி, பூமியிலே சாட்சி யிடுகிறவைகள் ஆவி, ஜலம், இரத்தம் என்பவை களாகும் ஆக இரு இடங்களிலும் மூன்று சாட்சிகள் உண்டு.
- ஏனெனில் எந்த காரியமும் ஒரே சாட்சியினால் ஏற்றுக் கொள்ளப்படாது. இரண்டு, மூன்று சாட்சியினால் தான் காரியம் நிலைவரப்பட வேண் டும். என்பது தேவ பிரமாணம் ஆகும்.
- யோபுவைக்குறித்து தேவன் சாட்சி சொன்னார். தாவீ தைக் குறித்து “இவன் என் இருதயத்துக்கு ஏற்றவனாய்க் கண்டேன். எனக்கு சித்தமா னவைகளை செய்வான்.” என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார்.
- கர்த்தரே கடைசி காலத்தில் சாட்சியாய் இருப்பேன் என்கி றார். வசனத்தை முழுவதும் வாசிப்போம்.
- **நான் நியாயத்தீர்ப்பு செய்யும் படி உங்களிடத்தில் வந்து, சூனியக் காரருக்கும், விபசார ருக்கும், பொய்யானை இடுகிறவர்களுக் கும், எனக்கு பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளை களுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளு கிறவர்களுக்கும். பரதேசிக்கும் அநியாயஞ் செய்கிறவர்களுக் கும் விரோதமாக தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார். மல்கியா 3:5**
- இதுபோல ஒளியைக் குறித்து இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்க யோவான் ஸ்நான கன் வந்தார். என்னிலும் மேன் மையுள் ளவர் என்றும் இவரே தேவ குமாரன் என்றும் அவ ரைப் பற்றி சாட்சி சொன் னார்.
- சமாரியா ஸ்திரீ நான் செய்த எல்லாவற்றையும் எனக்கு சொன்னார் என்று இயேசு வைப் பற்றி சொன்ன சாட்சி யின் நிமித்தம் அந்த ஊரில் உள்ள சமாரியரில் அநேகர் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள்.
- நமது முற்பிதாக்கள் விசுவா சத்தினாலே தேவனிடம் நற் சாட்சி பெற்றார்கள். ஆபேல் நீதிமான் என்று சாட்சி பெற் றார், அவன் காணிக்கை குறித்து தேவன் சாட்சி சொன்னார் ஏனோக்கு தேவனுக்கு பிரிய மானவன் என்ற சாட்சியும் இருந்தது.
- லூக்கா *16:27* வசனத்தின்படி லாசரு, ஐசுவரியவான் சம்ப வத்திலே அந்த ஐசுவரியவான் பெ ரும் பாதாள பிளவுக்கு வந்த பின்...., ஆபிரகாமைப் பார்த்து, தகப்பனே நான் போய் சாட்சி அறிவிக்கும் பொருட்டு எனக்கு உத்தரவு வேண்டும் என்றான். ஒரு சிலருக்கு இப்படி நரகத் திற்கு சென்ற பின்னர்தான் சாட்சி சொல்ல வேண்டும் என்கிற ஆசையே வரும் போல் இருக்கிறது.
- பக்தனாகிய பவுல் சொல் லுகிறார். நான் ஆவியோட சேவிக்கிற தேவன் எனக்கு சாட்சியாய் இருக்கிறார். மட்டு மல்ல பரிசுத்தாவிக் குள் என் மனச்சாட்சியும் சாட்சியாய் இருக்கிறது என்று...,
- ஆகவே நீங்களும் சபை நடுவே தேவன் உங்களுக்கு செய்த அற்பு தங்களை சாட்சி யாக அறிவிக்க வெட்கப் படவே வேண்டாம்.
- வேதத்தில் சங்கீதபுத்தகத்தில் இன்னும் சாட்சிகளைப் பற்றிய ஏராளம் சத்தியங்கள் உள்ளது வசனத்தின் ஆதாரத் திலிருந்து சுருக்கமாக எழுதி னேன் ஒவ்வொரு குறிப்புக் கும் வசனவிளக்கம் உள்ளது. அவைகளை ஒத்து வாக்கிய அகராதியிலிருந்து அல்லது நேரம் எடுத்து நீங்களே வசனங்களைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள்.
- கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக நம் தேவன் அடையாளங்களும், அற்புதங் களும் செய்யும் படி அநுக் கிரகம் பண்ணினார் என்கிற அப்போஸ்தலர் *14:13* வசனம் உங்கள் வாழ் விலும் வந்து ஆசீர்வாத மாய் பலிக்கும்படி ஜெபிக்கிறேன்!



அத்தியாயம் 4



# வீடுகளில் ஜெபக்கூட்டம் நடத்த விரும்புகிறவர்களுக்கு

- கொலேசியர் 4:15ல் லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், "**அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள்**" என்று வாசிக்கிறோம். பிலமோனின் வீட்டிலும் கூடி ஜெபித்தார்கள்

- என் அன்பிற்கினியவர்களே! இக் காலங்களிலும் வீடுகளில் ஜெபக் கூட்டம் நடத்த விரும்புகிறவர்களுக்கு தேவ ஆசீர்வாதம் கூறுகிறேன். ஏனெனில் காலத்தைப் பார்த்தால் போதகராக இருக்க வேண்டிய நீங்கள்...., என்று வேதம் கூறுகிறது.

- ஆவிக்குரிய வாழ்வில் நாளுக்கு நாள் வளர்ச்சி என்பது அவசியம். நாம் பூ பூக்காத அழகு நிறைந்த பிளாஸ்டிக் செடிகளாய், பூக்களாய் இருப்பதை விட சிறு தொட்டியில் வளர்ந்தாலும் உயிர் உள்ள பூச் செடிகளாய் வாழ்வதே நறுமணம் வீசுவதே சிறப்புடையது.

- சபைகளில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை அவசியம். அதன் பிறகு வாரத்திற்கு, மாதத்திற்கு, வருடத்திற்கு ஒரு முறையாகிலும் வீட்டுக் கூட்டம் அதிக அவசியம். தென் கொரிய பாஸ்டர் பால் யாங்கிச்சோ இந்த வீட்டு ஜெபக் குழுக்கள் மூலத் தான் சபை வளர்ச்சியை பெற்றார்.

- ஆகவே நீங்களும் உங்கள் ஸ்தல மேய்ப்பருடன் கலந்து பேசி, அவரது மேற்பார்வையில், வழி நடத்துதலின்படி வீட்டுக் கூட்டங் களை நடத்துங்கள். அது சுவிசேஷம் பரவ ஏதுவாய் இருக்கும்.

- உபசரிப்பு, பாடல்கள், ஆராதனை, சாட்சிகள், தேவ செய்தி முடிந்த பின்னர். சிற்றுண்டி (சாப்பாடு) போன்றவற்றை முன்கூட்டியே யோசித்து, அதிக ஆயத்தத்துடன்; வசதிக்கு ஏற்றபடி சரியான நேரத்திற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

- கூட்டம் நடத்துகிறவர்களுக்கு விசேஷித்த வரம் பெற்றவர்கள் என்ற அதிகப்படியான சுய விளம்பரங்கள் தேவை இல்லை. தனி மனித வழி பாட்டுக்குள் வருகிற புதிய ஆத்துமாக்களை கொண்டு செல்லக் கூடாது. உறுதியான அழைப்பும் தெளிவான தரிசனத்தோடும் வீட்டுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப் பட வேண்டும்.





- வாரம் ஒரு ஊழியர், மாதம் ஒரு சாட்சி, அடிக்கடி வெவ்வேறு தீர்க்கதரிசிகள் என்று வீட்டுக் கூட்டத்திற்கு வந்து சென்றால் இருக்கிற ஜனங்களை குழப்பி விடுவார்கள். வருகிறவர்களும் குழம்பிப் போகிறார்கள்.

- மனம் திரும்பிய மந்திரவாதிகள் சொன்ன சாட்சிகளால் எந்த மந்திரவாதியும் மனம் திரும்பியதாக தெரியவில்லை. மாறாக சாட்சியைக் கேட்டவர்களுக்கு பிசாசு பயம் கூடி இருக்கிறது. **இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் தேவனுக்கு பயப்படும் பயத்தை விட பிசாசுக்கு பயப்படும் பயம் அதிகரித்திருக்கிறது.**

- அதை உணர்ந்த ஊழியரும், மகளே உனக்கு யாரோ சூன்யம் செய்து இருக்கிறார்கள்..., மகனே உனக்கு மூன்று கட்டுகள் இருக்கிறது. இந்த வீட்டிற்கு விரோதமாக தகடு வைக்கப்பட்டிருக்கிறது, என பொய்யான குறி சொல்லுகிறார்கள்.

- இதைக் கேட்ட நம்மவர்களும் சத்தியத்திற்கோ, வசனத்திற்கோ இந்த அளவு நடுங்குவது இல்லை. ஆனால் சாத்தானில் ஏவல் அதிக மாக இருக்கிறது. அந்த ஊழியர் மூலம் வெளிப்படுத்தினார் என்று பயந்து சாகிறார்கள்.

- இப்படிப்பட்ட கிறிஸ்தவ குறி சொல்லும் ஆட்களுக்கு சீக்கிரத்தில் பணம், புகழ், செல்வாக்கு, அனைத்தும் அதிகமாக கிடைத்து விடுகிறது.



அமாவாசைக்கும், பவுர்ணமிக்கும் தற்போது இவர்களே பழக்கப் படுத்தி..., மூடப் பழக்கங்களை கற்றுக் கொடுத்து ஆவிக்குரிய உலகத்தை பாழ்ப்படுத்துகிறார்கள்.

- நெற்றியில் கைவைத்து தள்ளி விட்டு இதுதான் பிசாசின் கிரியை, இவருக்கு சத்துருவின் போராட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே இருபத்தி இரண்டு வாரம், ஏழுவாரம், மூன்று வாரம் வாருங்கள் என சொல்லிகும் பலைச் சேர்க்கிறார்கள்.

- கூட்டம் கூடி விட்டால் அது ஊழியம் என்பது இவர்களது தப்பான கணக்கு; கேட்டுக்குப் போகும் வழி விசாலமாய் இருக்கும். அநேகர் அதில் பிரவேசிப்பார்கள். நரகத்திலும் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பது புரிவதே இல்லை, இவர்களுக்கு **ஆகவே தீமை செய்ய திரளான பேர்களை பின்பற்றாதிருப்பாயாக!**

- வீட்டுக் கூட்டங்களுக்கு செய்தி கொடுக்க அழைக்கப்படுகிறவர்களை நன்கு அலசி ஆராய்ந்து அவர் கள் வாழ்வில் கனிகள் இருக்கி றதா? சத்தியத்திற்கு சாட்சி யாக வாழ்கிறாரா? என விசாரித்து பாருங்கள்.

- வீட்டுக் கூட்டங்கள், சபையைச் சேராத கூட்டங்களை நடத்துகிறவர்கள் வருகிற மக்களை ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கணும். அதற்கு மாறாக எத்தனையோ வருடங்கள் ஆனாலும் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கனும் என்ற பிரமாணத்தை மட்டும் சொல்லாமல் இருப்பது வேதனை.

- எங்கே ஜெபம் சொல்லிக் கொடுத்து, பிரமாணத்தை அறிவித்து, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தால் நமக்கும் ஊழியத்திற்கும் ஆபத்து வந்துவிடுமோ என பயந்து இவர்களை சத்தியத்தில் வளர்ப்பது இல்லை. பிறகு இவர்களை பங்காளர்களாக்கவும் முடியாது. பணம் சம்பாதிக்கவும் இயலாது.



- ஆகவே உங்களுக்கு, உங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் தான் ஜெபிப்போம். நாங்கள் ஜெபித்தால் உங்கள் குடும்பம் பிள்ளைகளும் அற்புதமாக மாறுவார்கள் என்று போலி விளம்பரம் செய்கிறார்கள் அதற்கு மாறாக.... உங்கள் முழங்காலை நம்புங்கள் தனி ஜெபத்தில் யாக்கோபை போல போராடி ஜெயம் எடுங்கள் என்று விசுவாசிகளை பழக்கு விக்க வேண்டும்.

- வீட்டுக் கூட்டம் நடத்த, ஊழியர் ஆக..., ஒரு நாள் ஊழியர் பயிற்சி, மூன்று வாரம் ஊழியர் முகாம் என போய் வந்தால் முழு தகுதியும் பெறலாம் என்பது சரியல்ல.

- அரசாங்கத்தில் பென்ஷன் கிடைக்கும் வரை உழைத்து விட்டு பிறகு முழு நேரம் ஊழியத்திற்கு வருகிறேன் என உங்கள் மனதின் கணக்குகளை கூட்டி கழித்தால் விடை சைபர்தான் வரும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வது கூடாத காரியம். முழு நேர ஊழியத்திற்கு வருகிறவர்கள் முன்குறிக்கப்பட்டு; அழைப்பை பெற்றவர்களாக இருப்பது முக்கியம்.

- குறைந்தது நீங்கள் ஒரு ஆவிக் குரிய சபையில் பல வருடங்கள் உத்தம விசுவாசிகளாக இருந்து, ஜெபத்தில் தேவ வசனத்தில் ஆவிக்குரிய அனுபவங்களில் வளர்ந்து சபை மேய்ப்ப பரிடம் நற்சாட்சி பெற்று பின்னர் ஊழியம் செய்தாலும், வீட்டுக் கூட்டங்கள் நடத்தினாலும் நலமாய் இருக்கும்.

- சாப்பாடு போட்டு சத்தியத்தை சொன்னால் இறுதி வரை சார முள்ள விசுவாசிகளை எழுப்பவே முடிவதில்லை. எதையோ எதிர்பார்த்து இயேசுவிடம் வந்தவர்களும், என்ன கிடைக்கும் என கேட்பவர்களுக்கும், ஏமாற்றமே கிடைக்கும் என்பதை ஆரம்பத்தி



லேயே அழகாய் பக்குவமாய் சொல்லிவிடுங்கள். இல்லாவிட்டால் வியாபார நோக்கத்திலேயே விசுவாசம் வைப்பார்கள். சாப்பாட்டுக்கு; அதிக முக்கியத்துவமும் நேரமும், உழைப்பும் வீணாகதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

- சபைகளை உடைத்துவிட்டு சபை தொடங்கும் சகோதரர்கள் பக்க வழியாய் நுழைந்தார்கள். இப்படிப்பட்டகள்ள சகோதரர் ஐக்கியம் கொள்ளக் கூடாது. கொஞ்ச நாள் வீட்டுக் கூட்டம் நடத்திய பிறகு நாமே சபை? பிறகு நமக்கு எதற்கு இன்னொரு சபை என்பார்கள்!

- ஆகவே சபைக்கு போகாமல் வீட்டுக் கூட்டங்களுக்கு வாருங்கள் என்றால்..., நீங்கள் உடனே உணர்வடைந்து விலகி விடுங்கள்.

- கூட்டம் முடிந்த பின்னரும் மணிக்கணக்கில் நின்று வீண் வார்த்தைகளை பேசி துர்செய்தி பரவ நீங்களே காரணமாக இருக்க கூடாது.

- முதலாவது தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்தவும் விசா ரிக்கவும் வீட்டில் உள்ள அனை வரும் திருவசனத்திற்கு சாட்சியாக வாழ்வதிலும் வீட்டுக் கூட்டங்கள் நடத்த அடிப்படை தகுதியாக அமையும்.

- கிறிஸ்துவின் சுவிசேஷம் பரவும் படி வீட்டுக் கூட்டங்களுக்கு புதிதாக இரட்சிக்கப் படாதவர்களை கூட்டி சேர்க்க வேண்டும். மாறாக சத்தியம் தெரிந்தவர்களையே சபை விசுவாசிகளே கூடி கூடி ஜெபித்து, புசித்து, இன்னும் ஆழமாக சத்தியம் கேட்கணும் என்பது சரியல்ல.

- இந்த வீட்டுக் கூட்டம் நடத்துகிற விசுவாசிகளுக்கு அதிகமாக பெண்களாகவே இருக்கின்றனர். இவர்கள் கனவுகள், தரிசனங்கள், சொப்பனங்கள், என்று சொல்லி கட்டுக் கதைகளை சார்ந்து இராமல் இரட்சிப்பை முக்கியப்படுத்த வேண்டும். இயேசுவிடம் வந்தால் ஓர் அற்புதத்தை பெற்றுக் கொள்ளலாம். **இயேசு வை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால் ஒவ்வொரு நிமிடமும் அற்புதம் தானாக நடக்கும்.**

- இப்படி சேர்க்கப்படுகிற ஆட்களை அங்குள்ள திருச்சபைகளில் சேர்க்க வேண்டும். வீட்டுக் கூட்டங்கள், சரியான படி நடந்தால் அனுதினமும் சபைகளில் ஆத்துமாக்கள் சேருவார்கள்; ஊழியங்கள் கட்டப்படும்.

- ஆதி அப்போஸ்தலர் காலங்களில் தேவ ஜனங்கள் வீடுகளில் தான் கூடி ஆராதித்தார்கள். அப்பம் பிட்டார்கள் மேல் வீட்டு அறையில் ஒருமனப்பட்டு கூடியிருந்த இடத்தில் தான் பரிசுத்தாவி யானவரும் வந்து இறங்கினார். உங்கள் வீடும் சகல ஜனங்களுக்கு ஜெப வீடாக திகழ வாழ்த்துகிறேன்! ஜெபிக்கின்றேன்!

அத்தியாயம் 5

# அடிப்படை அஸ்திபாரக் கருத்துகள்

* புறஜாதி மார்க்கத்திலிருந்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பிறகு; அடுத்தடுத்த காரியங்களைப் பற்றி தெளிவாக சொல்லி வழி நடத்த இன்றைய கிறிஸ்தவ உலகம் தவறி விடுவதால் அதிக குழப்பங்கள் வருகிறது. இதனாலே அநேகர் பின் மாற்றத்தில் போகிறார்கள். ஆகவே முதலாவது ஆதி திருச்சபையின் உபதேசங்களைப் பார்ப்போம்.

**ஆதி திருச்சபையின் உபதேசங்கள்**

* அப்போஸ்தலர்-2ம் அதிகாரம் வசனம்-36லிருந்து 47 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். நீங்களும் ஒரு முறை கூட வேதத்தை எடுத்து இப்பகுதியை படித்து விட்டு பின்னர் இச்செய்தியை வாசியுங்கள்.

**சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள் :**

* அதற்கு பேதுரு அவர்களை நோக்கி கூறியதாவது...,
* நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொரு வரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.
* அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்
* மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி மாறுப்பட்ட ஜீவியம் செய்யுங்கள்.
* அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்; அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்து இருந்தார்கள்.
* இந்த ஏழு சத்தியமும் சபையை தாங்கி நிற்கும் ஏழு தூண்களைப் போன்றது. ஆகவே இந்த சத்தியங்களில் படிப்படியாக வளர்ந்து வாருங்கள்.
* அப்போஸ்தலர் 15:28,29-ன்படி விக்கிரங்களுக்கு படைத்தவைகளை சாப்பிடக் கூடா து.
* ஆட்டு இரத்தம், கோழி இரத்தம் என எந்த வகையான இரத்தத்தையும் புசிக்கலாகாது
* நெருக்குண்டு செத்தவைகளை புசிக்க கூடாது. (பஸ் ஸில் அடிப்பட்டு செத்த ஆடு, மாடு, கோழி போன்றவை)
* வேசித்தனத்திற்கு விலகி இருக்க வேண்டும். கலாத்தியர் 4:9, 10,11-ன்படி பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுக்களுக்கு நீங்கள் மறுபடியும் போய் அடிமைப் பட கூடாது.



* நாட்களையும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்களையும் பார்க்கக்கூடாது. அதாவது ஜோதிடம், இராகு காலம், பஞ்சாங்கம், நல்ல காலம் என நினைக்கவும் கூடாது.

**கொலோசெயர் 2:20-23- ன்படி**

* உலகத்தாருடைய பழக்க வழக்கத்தின்படி நடவாமல் ஒரு மாறு பட்ட ஜீவியம் வேத வசனத்தின்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.
* மனுஷருடைய கற்பனைகளின் படியும் போதனைகளின் படியும் நடந்து தொடதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படக் கூடாது.
* தீட்டு என்பது உள்ளத்தில் இருந்து தான் புறப்படக் கூடியது. வெளியில் இருந்து உள் செல்வது மனிதனை தீட்டுப்படுத்தாது. மாயமான தாழ்மை சுய இஷ்டமான ஆராதனை சரீர ஒடுக்கம் ஞானம் என்று பெயர் பெற்று இருக்கிற பொய்யான கொள்கைகளின் விபரீதங்களை விட்டு விலக வேண்டும்.
* நாங்கள் ஆதி கிறிஸ்தவர்கள், இவர்கள் பாதியில் வந்த கிறிஸ்தவர்கள், என பாரம்பரிய பெருமை பேசும் மனிதர்களிடம் விலகி இருப் பதும் நல்லது. ஏனெனில் **பாவத்தை விட கொடூரமானது பாரம் பரியம்.** பாரம் பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிறார்கள். எனவே பாரம் பரியங்களை தூரப்படுத்துங்கள்.

**சுருக்கமாக சொன்னால்**

* உங்கள் ஜெப வாழ்வுக்கு தடை இல்லாமல் பார்த்துக் கொள்வது அதிக முக்கியம்
* வேத வசனங்களுக்கு ஏற்ப சாட்சியான வாழ்வும் அவசியம்
* ஆலய ஆராதனைக்கும் தவறாமல் போய் வர வேண்டும். சபை விசு வாசிகளோடு ஐக்கியம் குறையாமல் பார்க்க வேண்டும்.
* சபை மேய்ப்பனோடு கண்ணியமான உறவு இருக்க வேண்டும். உறவில் இருவருக்கும் உத்திர வாதம் உண்டு.
* அவசியமான இவைகளை அல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாய்க் கண்டது. இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வது நலமாயிருக்கும்.

**சுகமாயிருப்பீர்களாக!**

அத்தியாயம் 6

# சபைக்கு ஏன் வந்தேன்? வந்த பின்? வளரவேண்டுமானால்?



## நான் சபைக்கு ஏன் வந்தேன் ?

- நான் இளைப்பாற சபைக்கு வந்தேன். தேவனோடு ஒப்புரவாக சபைக்கு வந்தேன் நிறைவான வழியை அறிய வந்தேன். உண்மையான கிறிஸ்தவர்களோடு உறவாட வந்தேன். மனதிலுள்ள குழப்பத்தையும் பயத்தையும நீக்க வந்தேன். என்நாவை வாயாடித்தனத்துக்கு விலக்கிக் காக்க வந்தேன். என நோக்கங்கள் தூய் மையடையும் படி வந்தேன்.
- பிரிவினைகள். சச்சரவுகளிலிருந்து விடுதலைநாடி இங்கு வந்தேன். என் சுய உணர்ச்சிகள் நீங்கும்படி வந்தேன். நான் வெறுக்கிறவர்களையும் நேசிக்கும் பாடம் கற்க வந்தேன். ஆழ்ந்த தெய்வீக உணர்ச்சி நாடி இங்கு வந்தேன். பூரணமாய் என்னை இயேசுவுக்கு அர்ப்பணிக்க வந்தேன். என் சுயநலம் நீங்க வந்தேன். என் மனச்ச லிப்பு நீங்க வந்தேன். இதயத் தில் எழும் வெறுப்புணர்வு கள் மடிய வந்தேன்.
- நிலையான சந்தோஷம் பெற வந்தேன். அந்தரங்க சுத்திகரிப்பு அடையும்படி வந்தேன். குடும்ப ஒழுங்கீனங்கள் நீங்க வந்தேன். தள்ளாடும் கால்களை ஒருநிலைப்படுத்த வந்தேன். எனக்குள் நல் நோக்கங்கள் உருவாக வந்தேன். என் கோப குணத்தை கிருபையில் அமிழ்த்த வந்தேன்.
- மெய்ச்சமாதானம் நாடி வந்தேன். மாசுண்ட என் இருதயமாம் வலையை, அலசவும் பழுது பார்க்கவும் வந்தேன். என் கல்மனம் இளகும்படி வந்தேன். என் சண்டைக் குணத்தை சாகடிக்க வந்தேன். உடலின் பெலவீனங்கள் நீங்க வந்தேன். என் பெருமை நீங்க வந்தேன்.
- என் உள்ளான பலிபீடம் செப்பனிட வந்தேன். என் தடுமாற்றங்கள் நீங்க வந்தேன். அசையும் என் அஸ்தி பாரங்களை உறுதிப்படுத்த வந்தேன். என்னாலேயே எனக்கு வந்த சங்கடங்கள் போக்க வந்தேன். பிறர் நயங் காட்ட வீழ்ந்த நான், எழுந்து நிற்க வந்தேன்.
- தடுமாறித்தவிக்கும் நிலை மாற வந்தேன். மங்களாய்ப் போய்விட்ட என் மகிமை பிரகாசிக்கும்படி வந்தேன். என் போராட்ட குணம்மாற வந்தேன். அன்பற்ற என் தொனி மாறும்படி வந்தேன். பிறர் வெற்றியை, மகிழ்ச்சியுடன் ஏற்கும் பக்குவம் பெற வந்தேன்.
- ஆவிக்குரிய நிலையில், எலும்புக்கூடான என் நிலை மாற வந்தேன். ஒடுங்கின என் மன நிலையை ஒப்புவிக்க வந்தேன். முக்கியமானவனாயினும் வல்லமையில்லை எனும் நிலை மாற வந்தேன். கசப்பும், வெறு ப்பும், முறுமுறுப்பும் போக்க வந்தேன். எதிர்காலப் பயம் நீங்கி நல்வாழ்வு மலர வந்தேன்.

## நான் சபைக்கு வந்தபின்...

- புதிய வாழ்வு பெற்றேன். சிந்தைக்கு எட்டாத சமாதானம் பெற்றேன். மறுபடி வாலிபனாகி விட்டேன். என் பிரச்சனைகள் யாவும் நீங்கக் கண்டேன். சபையின் அன்பு எங்கும் காண வாஞ்சிக்கிறேன். தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலின் சுகத்தை அனுபவிக்கிறேன்.
- யாவரையும் நேசிக்கும் உள்ளம் பெற்றேன். தேவனோடு உறவாடும் பாடம் கற்றேன். என் வெறுப்புகள் யாவும் மறையக் கண்டேன். என் கல்மனம் உருகிக் கனியக் கண்டேன். மனதின் பெருமை நீங்கி தாழ்மை நிரம்பக் கண்டேன். உள்ளத்தின் எரிச்சல் நீங்கி சாந்தமியைக் கண் டேன். இன்னும் தேவனிடம் நெருங்கும் உணர்வு கொண்டேன். சலிப்புகள் சாக, பிடிப் புகள் பெருகக் கண்டேன்.
- என் அஸ்திபாரங்கள் பெலனடைவதுணர்ந்தேன். மங்கியெரிந்த நான் பிரகாசிப் பவனானேன். உபவாசப் பழக்கம் என்னில் பெருகக்கண்டேன். மாதிரி விசுவாசயாய் இருக்க உறுதிகொண்டேன். என் பிள்ளைகள் புதுப்பிக்கப் பட்ட ஒரு புதிய தாயைக் கண்டார்கள்.
- என் கண்களும் உள்ளமும் திறவுண்டன. எங்கிருப்பினும் பரலோக உணர்வு கொள்கிறேன். முதலிடத்தில் இயேசுவையும். அடுத்த நிலையில் பிறரையும் இறுதியாக என்னையும் வைத்துப் பார்க்கும் பாடம் கற்றேன். முன்பு பிறர் குறையே கண்ட நான். இப்போது என் குறைகள் உணர்ந்து திருந்துகிறேன். வாழ்வின் நோக்கம் அறிந்தேன்.
- என்னையும் திருத்தி, பிறரையும் திருத்தும் மார்க்கம் கண்டேன். தேவ செய்தியை என் வாழ்வில் காண்பிக்கும் துணிவு கொண்டேன். அல்லேலூயா!

## நம் சபை வளர வேண்டுமானால்...

- சபையை நேசிக்க வேண்டும். சபை வளர்ச்சியை விசுவாசிக்க வேண்டும். சபை வளர்ச்சியை விரும்ப வேண்டும். சபை வளர்ச்சியை எதிர் பார்க்க வேண்டும். சபை வளர்ச்சிபற்றி தரிசனங் காண வேண்டும். சபை வளர்ச்

சியில் பங்குபெற வேண்டும். சபை வளர்ச்சிக்காக ஆவியில் வைராக்கியம் கொள்ள வேண்டும். சபை வளர்ச்சிக்காக ஜெபிக்க வேண்டும்.

♣ சபையின் வளர்ச்சிபற்றி, ஒருவருக்கொருவர் கலந்துரையாடவேண்டும். சபையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றைக் கண்டுபிடித்து, அவற்றை அகற்றவேண்டும். சபையின் வளர்ச்சிக்குத் தடையாக வெளியுலகிலுள்ளவை பற்றிய அறிவு வேண்டும்.

♣ சபை வளர்ச்சிக்கு அனுகூலமாகப் பயன்படக்கூடிய வரங்கள் உங்களில் என்னென்ன உண்டு எனக் கண்டுபிடிக்க வேண்டும். வரங்களைப் பற்றி அறிந்து, அதன் பெலனைப் பெருக்க வேண்டும். சபை வளர்ச்சிக்கு நமது நேரம், பெலன் பணம், தாலந்து, வரம் ஆகய அனைத்தையும் மனப்பூர்வமாய் அர்ப்பணிக்க வேண்டும்.

♣ சபை வளர்ச்சிக்கு தகுந்த தேவ ஆலோசனைகளை வெளிப்பாடுகளை கூற வேண்டும். சபை வளர்ச்சிக்கு இது தான் எல்லை என நிர்ணயித்து நிச்சயித்து விடாத ஒரு இலக்கை வைத்துக் கொள்ள வேண்டும். சபை வளர்ச்சியில், மிகச் சிறந்த வேலையையும் அதிகக் கவனத்துடன் செய்ய வேண்டும்.

♣ வேதார்கமத்தின் அடிப்படையில் சபை இயங்க வேண்டிய முறை அமைப்பு பற்றி நல்ல தெளிவு வேண்டும். சபை வளர்ச்சியை நிதானித்துக் பழக்கிட வேண்டும் சபை வளர்ச்சியை வேதாகம வேகத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

♣ சபை வளர்ச்சியை ஸ்தாபனத்தின் வளர்ச்சியுடனும். இதர சபைகளின் வளர்ச்சியுடனும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். விளைவுகளை நிதானிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, நமது சுயரத்தத்தால் தாம் சம்பாத்தியம் பண்ணின மணவாட்டி சபையைச் சேர்க்கவே வருகிறார்.

**முடிவாக**

♣ பல ஆண்டுகளுக்கு முன் பாளையங்கோட்டைக்கு நான் சென்றிருந்தேன். அங்கு பாஸ்டர் I. ரத்தினம்பால் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர்கள் சபையில் ஒரு துண்டு பிரதி தந்தார்கள். அதில் இருந்த செய்தியை நான் வாசித்தபோது ஆவியில் களிகூர்ந்தேன். இதுவரை நீங்கள் படித்த பகுதி அதுதான். ஏன் வந்தேன்? வந்தபின்? வளரவேண்டுமானால்..., இன்னும் ஒரு விசை கூட வாசித்துப் பாருங்களேன்..., தேவ ஆசீர்வாதம் உங்களில் மிகுதியாய் பெருகும்!



# முடிவுரை



♠ உங்களுடன் சில நிமிடங்கள்....,

♠ இப்புத்தகம் முழுவதும் எண்ணங்களின் சிதறல்களாகவே உள்ளது. எடுத்துக் கொண்ட தலைப்பு கோர்வையாக விளக்கப் படவில்லையே என்று நீங்கள் நினைக்கலாம்.

♠ ஆகவே நீங்கள் தனி தனி கருத்துக்களாக தியானிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பிரச்சனைகள் கூறப்பட்டுள்ளன அவைகளுக்கு தீர்வு சொல்லப் படவில்லையே எனவும் நீங்கள் கேட்கலாம்.

♠ புத்தகத்தின் பக்கங்கள் கூடுதலாகிவிடுமே! அதுமட்டுமல்ல முன் அட்டை இன்னும் சற்று கடினதாக, தடினமாக இருக்கலாமே...,

♠ இருக்கலாம்..., தான். என்ன செய்ய! பணப்பற்றாக்குறை என்னை அசைத்துப் பார்க்கிறது.

♠ கடந்த புத்தகத்தினைப்படித்துவிட்டு எல்லோரும் பாராட்டினார்கள். வெறும் பாராட்டுகளை வைத்து நான் அடுத்த புத்தகத்தினை எப்படி வெளியிடுவது? பணம் வேண்டாமா? அது தானே எல்லாவற்றிக்கும் உதவும்.

♠ இந்த ஞான நன்மைகளை பெற்று, ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினைப்பெற்ற நீங்கள் மறவாமல் அடுத்த புத்தகம் வெளியிட பணம் அனுப்பி உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்.

♠ **மனக்காயங்களுக்கு மருந்து;** புன்னகையா? பொன்நகையா? என்ற பல தலைப்புகளில் இக்கால கட்டத்திற்கு ஏற்றவிதத்தில் புத்தகங்களை எழுதி வைத்திருக்கிறேன். நானே அதை எடுத்து எத்தனை காலமாய் வாசித்துக் கொண்டு இருக்கிறேன். நீங்களும் அதை விசுவாசிக்க வேண்டாமா?

♠ சத்தியம் பிரசித்தம் செய்யப்படவேண்டும். ஒலி, ஒளி, நாடாக்களாக வெளிவரவேண்டும். நான் முழங்காலில் நிற்கிறேன். கிறிஸ்துவுக்காக எதையாவது செய்யவேண்டும். இயன்றதை செய்ய வேண்டும் என்று பாரப்படுகிறவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்...!
- ஆதியாகமம் 24:31
....Come , You Who are Blessed By the LORD...! - Genesis 24:31







+ 91 9952912167
scs25may@gmail.com
Glorious Church India
www.gloriouschurch.in